விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஆவணி 18 ஞாயிற்றுக்கிழமை (04.09.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 259

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

SLS 107 தரம் கொண்டதும்

100 வீத சாதாரண போட்லன்ட்

சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

RAMCO

# நெருக்கடி நிலை ஏற்பட்டால் இராணுவம் தலையிடும்

## தளபதி ஜகத் ஜயசூரியா தெரிவிப்பு



(திருகோணமலை)

அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டாலும் நெருக்கடி நிலைமை ஏற்படும் இடங்களில் இராணுவம் தலையிடும். இவ்வாறு இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

முப்படையினரும் இணைந்து நடத்தும் போர் ஒத்திகை திருகோணமலையில் நடைபெற்று வருகின்றது. இவ் ஒத்திகை நிகழ்வினைப் பார்வையிடுவதற்காக நேற்று திருகோணமலைக்கு விஜயம் செய்த இராணுவத்தளபதி அங்கு செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

(20ஆம் பக்கம் பார்க்க)

## 2012இல் கல்வித்துறையில் புதிய மாற்றங்கள்

நாட்டின் கல்வித்துறையில் அடிப்படை ரீதியான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட உள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டின் இறுதிக்குள் கல்வி அமைச்சு புதிய கல்விச் சட்டமொன்றை பாராளுமன்றில் சமர்ப்பிக்க உள்ளதாகவும், அடுத்த ஆண்டு முதல் இந்தச் சட்டம் அமுல்படுத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், கல்வி மறுசீரமைப்பு தொடர்பில் பாராளுமன்றத்

(19ஆம் பக்கம் பார்க்க)

## சகல மாவட்டங்களினதும் பாதுகாப்பு முப்படையினரிடம் ஒப்படைப்பு

(கொழும்பு)

இலங்கையின் சகல மாவட்டங்களினதும் பாதுகாப்பை முப்படையினருக்கு ஒப்படைக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கையெழுத்தில் வெளியிடப்பட்ட இலக்கம் 1717-41 என்ற விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் இந்த அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 12 ஆவது பிரிவில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் இலங்கையின் சகல மாவட்டங்களிலும் அமைதியை நிலைநாட்டும் அதிகாரம் இராணுவம், விமானப்படை, கடற்படையினருக்கு வழங்கப்பட்டுள்ளது. அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டதன் மூலம் இல்லாது போன பொதுமக்களின் பாதுகாப்பு நடவடிக்கைகளில் இராணுவப் பிரசன்னம் இந்தப் புதிய வர்த்தமானி அறிவித்தலின் மூலம் மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

(19ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் உள்ள இராணுவ முகாம் அகற்றப்படமாட்டாது-திவயின

(கொழும்பு)

வடக்கில் தற்போது அமைந்துள்ள இராணுவ முகாம் எதுவும் அகற்றப்படமாட்டாது என பாதுகாப்புத்துறை தகவல்கள் தெரிவிப்பதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

வடக்கிலுள்ள இராணுவ முகாம்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் வேண்டுகோள் விடுத்திருந்தமை குறித்து பாதுகாப்புச் செயலாளரான கோத்தபாய ராஜபக்ஷ தனது அவதானத்தை செலுத்தியுள்ளார் எனவும் அது தெரிவித்துள்ளது.

வடக்குக் கிழக்கு சிவில் நிர்வாகத்தில் இராணுவத் தலையீடு முற்றாக நிறுத்தப்பட வேண்டும். அத்துடன் தமிழர் நிலப் பகுதிகளில் இருந்து இராணுவம் முற்றாக அகல வேண்டும்.

யுத்தகாலத்திலும் இதற்கு முன்பாகவும் கைது செய்யப்பட்டவர்கள் அனைவரையும் விடுதலை

(19ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.நகரைக் கண்காணிக்க வீடியோ பொருத்தப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகரின் பாதுகாப்பைப் பலப்படுத்தும் வகையில் கண்காணிப்பு வீடியோ பதிவுக்கருவிகளைப் பொருத்துவதற்கு பாதுகாப்பு அமைச்சு முடிவு செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொழும்பு நகரில் பாதுகாப்பு சோதனைச் சாவடிகளை அகற்றிய பின்னர், முக்கிய இடங்களில் கண்காணிப்பு வீடியோ கருவிகள் பொருத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

இதே

(19ஆம் பக்கம் பார்க்க)

## சனல் 4 ஆவணப்படமும் ஐ.நா. அறிக்கையும் முட்டாள்தனமானவை ; இந்துவுக்கு ரஜீவ பேட்டி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக 2009 இல் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இலங்கைப் படையினர் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டனர் என தகுந்த ஆதாரத்துடன் நிரூபிக்கப்படுமாயின் அது குறித்து விசாரணை நடத்த முடியுமென பாராளுமன்ற உறுப்பினர் ரஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இலங்கைப் படையினரில் பெரும்பாலானோர் மிகவும் ஒழுக்கமாக நடந்துகொண்டதாக த ஹிந்து பத்திரிகைக்கு அளித்துள்ள விசேட பேட்டியில் ரஜீவ விஜேசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை குறித்து சனல் 4 வெளியிட்ட ஆவணப்படமும் ஐ.நா. தருஸ்மன் குழு வெளியிட்ட அறிக்கையும் முட்டாள்தனமானது என ரஜீவ ஆவேசமாக கூறியுள்ளார்.

அதிக பொதுமக்கள் கொல்லப்பட்டனர், வைத்தியசாலைகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது, மக்கள் பட்டினி கிடந்தனர் போன்ற அனைத்து தகவல்களும் முட்டாள்தனமானது என அவர் குறிப்பிட்டுள்ளார். ஆனால் கவனம் செலுத்தக்கூடிய

(19ஆம் பக்கம் பார்க்க)

வீட்டிலும் வேலைத்தலத்திலும் இதமான காற்றை இனிதே அனுபவிக்க ...

சிங்கர் எயார்கண்டிஷனர்கள்

• உத்தரவாதம் • விற்பனைக்குப் பிந்திய சேவை • இலகு தவணைக் கொடுப்பனவு



SINGER

யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்

யாழ்ப்பாணம்-ஸ்டான்லி வீதி, ஆஸ்பத்திரி வீதி, சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி, மானிப்பாய்

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களே 16 ம் திகதி வரை பொறுத்திருங்கள். கணினிக் கல்விக்கான மாபெரும் சர்வதேச புலமைப்பரிசில் உங்களுக்காக உள்ளது. விபரங்களுக்கு 14 , 15 திகதி பத்திரிகைகளை பாருங்கள். வீணாக அதி கூடிய கட்டணங்களை கட்டாதீர்கள்!!! 16ம் திகதி வரை பொறுமையோடு காத்திருங்கள். பரிசில்கள் பல !!!

**A GENERAL ENGLISH COURSE**

ஆங்கிலம் கற்க ஆர்வமுடையவர்கட்கு:
பூரணமான கற்கை நெறி
சகலருக்குமுரியது
சகல பொதுப் பரீட்சைக்குமுரியது
Total immersion course
உச்சரிப்புடன் பேச, வாசிக்க, எழுத, இலக்கண, இலக்கியமயமானது.

ஆரம்பம்: 10.09.2011 காலை 10.00 மணி

ஆறுமாத கற்கைநெறி
வாரத்தில் இரு நாட்கள்; 04 மணித்தியாலம்
ஆசிரியர்: த.நடபஞ்சாட்சரம்

தொடர்பு: நிர்வாகி
NEW SCIENCE HALL
கன்னாதிட்டி - யாழ்ப்பாணம்.

# சுனாமி முன்னெச்சரிக்கை 6-ம் திகதி பரீட்சிப்பு

நாடு முழுவதிலுமுள்ள 52 சுனாமி முன்னெச்சரிக்கை கோபுரங்களிலும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பரீட்சித்துப்பார்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய பணிப்பாளர் ஏ.எம்.எம். கசீர் தெரிவித்துள்ளார்.

இக்கோபுரங்கள் எச்சரிக்கை ஒலி எழுப்பும்போது மக்கள் எவ்வித அச்சமும் கொள்ளத் தேவையில்லையென மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

கோபுரங்களின் இயங்கும் தன்மையை பரீட்சித்துப்பார்ப்பதே இதன் நோக்கமாகுமென அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (ந-8)

வடமராட்சி மக்களுக்கு ஓர் பொன்னான சந்தர்ப்பம்.
வீட்டிலேயே டிப்ளோமா,பட்டப்படிப்பு, உயர் பட்டப்படிப்பு

உடன் தொடர்பு கொள்க
**அண்ணாமலைப் பல்கலைக்கழகம்**
**SACHCHI INTERNATIONAL ACADEMIA**
நெல்லியடி ம.ம.வித்தியாலயம் அருகில்
நெல்லியடி, கரவெட்டி.
கல்வி இயக்குநர் :அதிபர் திரு சிறீபதி B.A.Dip in Ed.
Hartly College முன்னாள் அதிபர்; உதவி கல்வி அதிகாரி
தொலைபேசி: 0772292758
(6051)

A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்காக
மிகக் குறைந்த கட்டணத்துடன் புதிய பிரிவுகள் ஆரம்பம்

சர்வதேச தரச்சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய கணனி கற்கை நெறிகள், ஆங்கிலக் கற்கை நெறிகள்
மற்றும் சிறுவர்களுக்கான விசேட கற்கை நெறிகள்



Kids Pre School
100% Practical

Global Academy Of Automations
#5, First Floor, New Market Building, Jaffna.
Tel : 011-3050111

## மரண அறிவித்தல்

### திருமதி பார்த்தசாரதி பத்மாவதி



சுழிபுரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பார்த்தசாரதி பத்மாவதி 03.09.2011 அன்று சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் வேலுப்பிள்ளை முத்துப்பிள்ளை ஆகியோரின் மகளும், காலஞ்சென்ற கல்வளை சண்டிலிப்பாயை சேர்ந்த குமாரசூரியர் சிவபாக்கியம் ஆகியோரின் மருமகளும், ஓய்வுபெற்ற P.W.D.ஓவசியர் பார்த்தசாரதியின் அன்பு மனைவியும்,விஜயகுமார் (நூலகர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை), மோகனகுமார்(U.K) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நந்திகாதிலகேஸ்வரி, சியாமளா (U.K) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் மற்றும் சூரியமோகன்(U.K), பிரியந்தி(U.K), சூரியப்பிரகாஷ், சிவப்பிரகாஷ், ஜெயப்பிரகாஷ் (மாணவர்கள், யா/விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்), சத்தியபிரகாஷ் (மாணவன், யா/ஐக்கியசங்க சைவ வித்தியாசாலை சுழிபுரம்), லதுசன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும், காலஞ்சென்றவர்களான பத்மநாதன், பூபதி, பூமணி ஆகியோரின் சகோதரியும் மற்றும் செல்லமுத்து, காலஞ்சென்ற நாகநாதர், சிவஞானம், சிங்கவேலு, சுபத்திராதேவி ஆகியோரின் மைத்துனியும், ஆனந்தி, பிரணவபவா, முருகானந்தன் ஆகியோரின் மாமியாரும், சிவயோகப்பிரியா, Dr.சிவறஞ்சினி ஆகியோரின் பெரியம்மாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03.09.2011 அன்று அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

இல.12, நெல்லியான் வீதி, சுழிபுரம்.
0213007587

தகவல்:
குடும்பத்தினர்

(6055)

**மனோதத்துவ வைத்தியம்**
(General Psychotheraphy)
பிரபல மனோதத்துவ நிபுணர்
**Dr.P.ஆறுமுகம்**
T.P.: 0719315664 , 0777569205
**மீண்டும் யாழில்**

05.09.2011 முதல் 10.09.2011 வரை 6 நாட்கள் மட்டுமே ...
உடன் பதிவுகளை மேற்கொள்ளவும். பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு.ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளை படுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம்,நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோ தத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

கமால் ரூரிஸ் இன் (சிவதர்சன் எலெக்ரிக்கல்ஸ் அருகில்) வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்குமிடையில், 392, மணிக்கூட்டு கோபுர வீதி,யாழ்ப்பாணம்.
(C-4297)

**வர்த்தகப் பெருமக்களே...**
வியாபாரத்தைப் பதிவு செய்தல்
பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
VTL மெனேஜ்மெண்ட்
கொழும்பு-03
0729994777
0117902938

**மணமகள் தேவை**
யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1977 மிருகசீரிடம் 12-ல் செவ்வாய் பாவம் 24 சொந்த வியாபாரம் U.K.Citizen மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை.
அம்பிகை திருமண சேவை
69, 2/1, விகாரை லேன்,
கொழும்பு-06
0113040759,0718285673,
0713671062
(6048)



**சிவபார்வதி ஜோதிட நிலையம்**
Shivaparvathi Jhothidam
பண்டித்-மஞ்சுநாத சுவாமி
தொ.பே. இல: 077 8949044

அன்பானவர்களே!
இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள சுவாமி அவர்கள் வம்சாவளியாக காளி அம்மன் அருள் கொண்டு கைரேகை மூலம் துல்லியமாக நடந்தவை, தொழில், வியாபாரம், லட்சுமிகர விடயமான பொருத்தம் போன்ற விடயங்களை யும், கணவன்-மனைவி ஒற்றுமையின்மை, கோர்ட் வழக்கு, உடல் நலமின்மை போன்றவற்றிற்கு பரிகாரம், பிரிந்தவர்கள் ஒன்று கூடுதல், வெளியூர் பயணங்கள், கல்வி உத்தியோகம், திருமணயோகம், குழந்தை பாக்கியம், வாஸ்து சாஸ்திரம், எதிரிகள் கண்திருஷ்டி போன்ற எல்லாவித பிரச்சினைகளையும் எதிர்கால பலாபலன்களையும் தெரிவிப்பார். என்ன பிரச்சினையாக இருந்தாலும் 21 நாட்களில் சாஸ்வத பரிகாரம் செய்து கொடுப்பார்.

Video Call Skype Contect: PARAMASHIVAN1
**SANJAYA HOTEL**
414, Hospital Road, Jaffna.
(HNB வங்கி அருகில், யாழ். பஸ் நிலையம் முன்பாக)
நேரம்:- காலை 7.00 மணி முதல் மாலை 7.30 மணி வரை
கட்டணம் ரூபா 101/-
(6045)

## அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர்
சுப்பையா மாரியாயி

இல.41,பிரப்பங்குளம் வீதி,
யாழ்ப்பாணம்.

அன்புடையீர்,

07.08.2011 ஞாயிற்றுக்கிழமை
சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி
அமரர் சுப்பையா மாரியாயி அவர்களின்

அந்தியேட்டிக் கிரியைகள் 04.09.2011இன்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 7.00 மணியளவில் வில்லூன்றி புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள் 06.09.2011 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம்தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து இவ் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
சண்முகம் குடும்பத்தினர்
(சண்முகம் சைவ உணவகம்)

(6053)



# விழிப்பாயிருங்கள் !

**பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியினால் அனுமதியளிக்கப்பட்ட நிறுவனங்கள்**
(31.08.2011 இல் உள்ளவாறு, அகரவரிசைப்படி)

## உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்

1. அமானா பாங்க் லிமிடெட்
2. அட்டன் நசனல் பாங்க் பிஎல்சி
3. இந்தியன் ஓவசீஸ் பாங்க்
4. இந்தியன் பாங்க்
5. இலங்கை வங்கி
6. எம்சிபி பாங்க் லிமிடெட்
7. ஐசிஐசிஐ பாங்க் லிமிடெட்
8. கபீப் பாங்க் லிமிடெட்
9. கொமர்சல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
10. சம்பத் பாங்க் பிஎல்சி
11. சிற்றி பாங்க் என்ஏ
12. செலான் பாங்க் பிஎல்சி
13. டீஎவ்சீசீ வர்தன பாங்க் லிமிடெட்
14. டொயிச் பாங்க் ஏஜி
15. நெசனல் டிவலொப்மன்ட் பாங்க் பிஎல்சி
16. நேசன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி
17. கொங்கொங் அன்ட் சங்காய் பாங்கிங் கோப்பிரேசன் லிமிடெட்
18. பப்ளிக் பாங்க் பெர்காட்
19. பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி
20. மக்கள் வங்கி
21. யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி
22. ஸ்ரேற் பாங்க் ஒவ் இந்தியா
23. ஸ்ரான்டட் சார்ட்டட் பாங்க்

## உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்

1. அரச ஈட்டு முதலீட்டு வங்கி
2. இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
3. எம்பீஎஸ்எல் சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
4. சணச டிவலொப்மன்ட் பாங்க் லிமிடெட்
5. சிறிலங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
6. டிஎவ்சீசீ பாங்க்
7. தேசிய சேமிப்பு வங்கி
8. பிரதேசிய சன்வர்த்தன பாங்க்
9. லங்காபுத்திர டிவலொப்மன்ட் பாங்க் லிமிடெட்

## பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள்

1. அபான்ஸ் பினான்ஸ் லிமிடெட்
2. அலயன்ஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
3. அசோசியேட்ரட் மோட்டார் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
4. ஆர்பிகோ பினான்ஸ் கம்பனி பிஎல்சி
5. இன்டஸ்றியல் பினான்ஸ் லிமிடெட் (*)
6. எதிரிசிங்க ரஸ்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட்
7. எல்பீ பினான்ஸ் பிஎல்சி
8. ஏசியன் பினான்ஸ் லிமிடெட்
9. ஏசியா கொமர்ஸ் லிமிடெட்
10. ஏஎம்டபிள்யூ கபிட்டல் லீசிங் லிமிடெட்
11. ஏசியா அசெற் பினான்ஸ் லிமிடெட்
12. கன்றிச் பினான்ஸ் லிமிடெட்
13. கிராமின் மைக்ரோ கிறடிற் கம்பனி லிமிடெட்
14. கொமர்சல் கிறடிட் பிஎல்சி
15. சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி
16. சிலோவ் பினான்ஸ் லிமிடெட்
17. சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சி
18. சிற்றிசன்ஸ் டிவலொப்மன்ட் பிசினஸ் பினான்ஸ் பிஎல்சி
19. சென்றல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் லிமிடெட்
20. சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
21. செங்கடகல பினான்ஸ் கம்பனி பிஎல்சி
22. சொவ்றலொயிக் பினான்ஸ் பிஎல்சி
23. ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட்
24. த பினான்ஸ் அன்ட் கரண்டி கம்பனி லிமிடெட் (*)
25. த பினான்ஸ் கம்பனி பிஎல்சி
26. த மல்டி பினான்ஸ் கம்பனி லிமிடெட்
27. த ஸ்ரான்டட் கிறடிற் லங்கா லிமிடெட் (*)
28. நந்தா இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட்
29. பார்ட்லீட் பினான்ஸ் லிமிடெட்
30. பிம்புத் லங்கா இன்வெஸ்மன்ட் லிமிடெட்
31. பீப்பிள்ஸ் லீசிங் பினான்ஸ் பிஎல்சி
32. பீப்பிள்ஸ் மேச்சன்ட் பினான்ஸ் லிமிட்டெட்
33. மர்க்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட்
34. மர்ச்சன்ட் கிறடிற் ஒப் சிறிலங்கா லிமிடெட்
35. ரிகேஎஸ் பினான்ஸ் லிமிடெட்
36. லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் பிஎல்சி
37. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி
38. ஸ்வர்ணமகால் பினான்சஷியல் ஸர்விஸஸ் லிமிடெட்

(*) இலங்கை மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட முகாமைத்துவ முகவர்களால் முகாமைத்துவம் செய்யப்படுகின்றன.

## நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய விடயங்கள்

- மேற் கூறப்பட்ட நிறுவனங்கள் அவற்றின் வர்த்தக நடவடிக்கைகளை மதிநுட்பமாக நடாத்துவதை ஊக்குவிப்பதன் மூலம் பொதுமக்களின் வைப்புக்களைப் பாதுகாப்பதற்காக மத்திய வங்கிக்கு அவற்றை ஒழுங்குபடுத்தி மேற்பார்வை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும், வைப்புக்களுக்கு உத்தரவாதம் அளிக்கவோ அல்லது இதில் ஏதாவதொரு நிறுவனம் ஒருபோதும் முறிவடையாது என்று உறுதிப்படுத்தவோ சட்டரீதியான அதிகாரம் மத்திய வங்கியிடம் கிடையாது. மத்திய வங்கி, அதனால் மேற்பார்வை செய்யப்படும் ஒரு வங்கி அல்லது ஒரு நிதிக் கம்பனி முறிவடையுமிடத்து வைப்பாளர் ஒருவருக்கு அவரின் மொத்த வைப்புக்களின் தொகையில் உயர்ந்த பட்சம் ரூபா 200,000 கொண்ட தொகையினை 2012 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் மீள்கொடுப்பனவு செய்யப்படுவதற்கு உத்தரவாதம் அளிப்பதற்காக வைப்புக் காப்புறுதி திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ஏதாவதொரு நிறுவனமொன்றில் பணத்தை வைப்பிலிடும்போது தயவுசெய்து உங்கள் வைப்புக்களின் பாதுகாப்பு தொடர்பாக அதிக கவனம் செலுத்தல் வேண்டும்.
- ஒழுங்குபடுத்தப்படாத மற்றும்/ அல்லது மேற்பார்வை செய்யப்படாத நிறுவனங்களில் வைப்புக்களை மேற்கொள்வதன்மூலம் அவற்றிற்கு இரையாகாமல் உங்களுடைய கடின உழைப்பால் பெற்ற பணத்தை "பாதுகாக்கும்படி பொதுமக்கள் வலிமையாக அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**இலங்கை மத்திய வங்கி**

தொ.பேசி.: 2477100, 2477105, 2477120, 2477129 தொ.நகல்: 2477711, மின்னஞ்சல்: banksup@cbsl.lk
தொ.பேசி.: 2477500, 2477504 தொ.நகல்: 2477738, மின்னஞ்சல்: secdsnbfi@cbsl.lk

CENTRAL BANK OF SRI LANKA 60 growth& stability







உங்கள் எண்ணங்களை நிறைவேற்றும் லீஸிங் பங்காளி

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி வழங்கும் நேஷன்ஸ் லீஸிங் சேவையின் மூலம் உங்களுக்கு தேவையான வாகனம் அல்லது இயந்திர உபகரணங்களை இலகுவாகவும் சிறந்த கொடுப்பனவு முறையிலும் இன்றே பெற்றுக்கொள்ளுங்கள்.

அருகிலுள்ள நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியை நாடுங்கள்
அழையுங்கள்: (011) 4 791 777
(011) 4 218 218
www.nationstrust.com
Nations Trust Bank PLC - PQ 118

Nations Trust Bank
Nations Leasing





# சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வலயக்கல்வி அலுவலகத்தினால் ஆரம்பக்கல்வி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், முறைசாராக்கல்வி, இரண்டாம் மொழி (சிங்களம்) ஆகிய பாடங்களுக்கான சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கு வலிகாமம் வலயத்திற்குட்பட்ட இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு I அல்லது வகுப்பு 2-I ஐச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

இப்பதவிக்கான தகைமைகளாக குறிப்பிட்ட பாடத்தினை (அல்[illegible]ப்பாடம் சார்ந்த ஏற்புடைய பாடத்துறை[illegible]ரு பாடமாகக் கொண்டு பட்டம் பெற்றிருப்ப[illegible]ாடு விண்ணப்பிக்கும் பாடத்தில் விண்ணப்பதாரி 07 வருடங்களுக்கு குறையாத கற்பித்தல் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் பட்டப்பின் கல்வி டிப்ளோமா சான்றிதழ் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும். (கல்விமாணிப் பட்டதாரிகளுக்கு பட்டப்பின் கல்வி டிப்ளோமா சான்றிதழ் தகைமையிலிருந்து விலக்களிக்கப்படும்)

அல்லது

❁ விண்ணப்பிக்கும் பாடத்துறையில் அரசினர் ஆசிரிய கலாசாலையில் அல்லது தேசிய கல்வி நிறுவகத்தில் ஆசிரிய பயிற்சி பெற்றிருப்பதோடு விண்ணப்ப முடிவுத் திகதியன்று குறித்த பாடத்தில் பயிற்றப்பட்ட ஆசிரியராக 10 வருடங்களுக்கு குறையாது தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை கற்பித்தல் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

❁ பயிற்றப்பட்ட ஆசிரியராக இருந்தும் பட்டம் பெற்றவர்களுக்கு பயிற்சித் துறையும் பட்டமும் அக்குறிப்பிட்ட பாடத்தை சார்ந்ததாக இருக்குமிடத்து பட்டப்பின் டிப்ளோமா சான்றிதழ் தகைமையிலிருந்து விலக்களிக்கப்படும்.

எனவே, விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் மாதிரி விண்ணப்பப்படிவங்களை வலயக்கல்வி அலுவலகத்தில் பெற்று இரு பிரதிகளில் பூர்த்தி செய்து எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன் உரிய முறைப்படி வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-4)

# அச்சுவேலி பொலிஸாரினால் பொதுமக்களுக்கான கலந்துரையாடல்

(அச்சுவேலி)

அச்சுவேலி பொலிஸாரினால் பொதுமக்களுக்கான கலந்துரையாடல் ஒன்று ஆவரங்கால் மேற்கு கிராம அலுவலகர் பிரிவிலுள்ள விவேகானந்தர் சனசமூக மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

எனவே அப்பகுதி மக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நிஷங்க ஜசரட்ண அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-4-70)

# வாரம் ஒரு தகவல்

## கல்யாண சௌகரியம்!

"இன்ஸ்பெக்டர் சேர்! வணக்கம்!"

"வாருங்கள்! காலை நேரத்தில் பொலிஸ் நிலையத்தைத்தேடி வந்திருக்கிறீர்கள், என்ன விடயம்?"

"சேர்! இந்தப் பொலிஸ் நிலையத்திலே எத்தனையோ பேருக்கு நீங்கள் கல்யாணம் செய்து வைத்திருக்கிறீர்கள்!"

"ஹி!ஹி! அதை ஒரு சேவையாக நினைத்து செய்துகொண்டு வருகிறேன். இந்த உலகத்திலே யாருமே கல்யாணம் ஆகாமல் இருக்கக்கூடாது என்பது என்னுடைய கொள்கை!"

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?"

"இந்த உலகத்திலே கல்யாணம் செய்தவர்கள்தான் அதிக உடல் நலத்தோடு இருக்கிறார்கள்!"

"என்ன சொல்கிறீர்கள்?"

"ஆரோக்கியமாக இருக்கிறது யார்? கல்யாணம் செய்தவர்களா? செய்யாதவர்களா? அப்படி என்றால் அவுஸ்திரேலியாவிலே (centre for clinical epidemiology and biostistics university of Newcastle) ஓர் ஆராய்ச்சி நடந்தது!"

"சரி!"

"கல்யாணம் செய்தவர்கள்தான் அதிக ஆரோக்கியத்துடன் இருக்கிறார்கள்! ஆனாலும் இதற்கு என்ன காரணங்கள் என்பதை இன்னமும் முழுமையாகக் கண்டுபிடிக்கவில்லை!"

"அப்படியா சொல்கிறீர்கள்?"

"ஆமாம்! அங்கே கல்யாணம் செய்யாமலே இருக்கிறவர்கள் பலரைச் சந்தித்துப் புள்ளி விபரம் சேகரித்தார்கள். அவர்களுக்கெல்லாம் கல்யாணம் செய்துவிட்டு இருக்கிறவர்களைவிட அதிகமாக மாரடைப்பு வருகின்றது! இந்நோய் வந்ததற்குப் பின்னரும் அதிகநாள் உயிரோடு இருக்கிறவர்கள் யாரென்று பார்த்தால் அதுவும் கல்யாணம் செய்தவர்கள்!"

"ஆச்சரியமாக இருக்கிறதே!"

"ஆம்! அதனாலே... கல்யாணம் வேண்டாம் என்று சொல்லிக்கொண்டு இருக்கிற ஒருவர் அதிகநாள் வாழ வேண்டும் என்று ஆசைப்பட்டால் அதற்கு வழி உடனடியாகக் கல்யாணம் செய்வதுதான்!"

"இருந்தாலும்..."

"அதெல்லாம் இருக்கட்டும். இப்போது நீங்கள் இங்கே வந்திருக்கிற காரணத்தை இன்னமும் சொல்லவில்லையே?"

"என் மனைவி நேற்று திடீரென்று காணாமல் போய்விட்டார்!"

"ஆமாம்! அதுதான் நேற்றைய தினமே உங்கள் மாமனார் இங்கே வந்து ஒரு புகார் கொடுத்துவிட்டு சென்றுள்ளார் கவலைப்படாதீர்கள்... கண்டு பிடித்துக் கொடுத்து விடுகிறோம்!"

"நீங்கள் கண்டுபிடித்துக் கொடுத்து விட்டால், அப்புறம் எப்படி இன்ஸ்பெக்டர் நான் கவலைப்படாமல் இருக்க முடியும்?"

"அப்படியென்றால்...?"

"அவசரப்பட்டு அப்படி எதுவும் செய்ய வேண்டாம் என்று. சொல்லிவிட்டுப் போகலாம் என்று தான் வந்தேன்!" என்றார்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# வருடாந்த திருவிழா

(ஊர்காவற்றுறை)

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள தூய அடைக்கல அன்னை ஆலய வருடாந்த திருவிழா கடந்த 30 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இவ் ஆலயத்தின் பங்குத் தந்தை றெஜி-இராஜேஸ்வரன் தலைமையில் வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

வழிபாடுகள் அனைத்தும் தினமும் மாலை 4 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. இதில் எதிர்வரும் 8 ஆம் திகதி வியாழக்கிழமை திருநாள் திருப்பலி, திருச் சொரூபப்பவனி, இறையாசீர் என்பவற்றுடன் திருவிழா வழிபாடுகள் நிறைவுபெறும்.

(ஸ்ரீ-4-72)

# வடமாகாண கல்வி முன்னேற்றம் தொடர்பான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வி முன்னேற்றம் தொடர்பான கலந்துரையாடல் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.நூலகத்தில் உள்ள வடமாகாண கேட்போர் கூடத்தில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் மற்றும் மாகாண கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் உட்பட 12 வலயக் கல்விப்பணிப்பாளர்களும் திட்டப்பணிப்பாளர்கள் மற்றும் பொறியியலாளர் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இக்கலந்துரையாடலின் போது 12 கல்வி வலயங்களில் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டம் மற்றும் கல்வி அபிவிருத்தி சம்பந்தமான அறிக்கைகளை ஆளுநரிடம் சமர்ப்பிக்கவுள்ளனர்.

(ஸ்ரீ-4)

# தீவகத்தில் குடிநீருக்கு பெரும் தட்டுப்பாடு

(ஊர்காவற்றுறை)

தீவுப்பகுதிகளில் குடி தண்ணீருக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

இதனால் அப்பகுதி மக்கள் குடிநீரைப் பெற்றுக்கொள்வதற்கு மிகுந்த சிரமப்பட்டு வருகின்றனர்.

நாட்டில் நிலவி வரும் கடும் வரட்சி காரணமாகவே இத் தட்டுப்பாடு நிலவுகின்றது. சில கிணறுகளில் குடிநீர் வற்றியுள்ளதனால் நன்னீர் தேடி 250மீற்றருக்கப்பால் மக்கள் செல்கின்றனர்.எனவே, இம்மக்களின் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்வதற்கு உரிய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

(ஸ்ரீ-4-72)

# இராசி பலன்

04.09.2011
(ஆவணி 18, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 06.03 மணிக்கு
சப்தமி மாலை 05.25 மணிவரை
அனுஷம் பின்னிரவு 02.50 மணிவரை
இராகுகாலம் 4.35-6.05 மணிவரை
சுபநேரம் 9.05-10.35 மணிவரை
மூன்றாம் ஆவணி ஞாயிறு.

**மேடம்** குழப்பங்கள் தீர ஆதவனை வழிபட வேண்டிய நாள், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை, உறவினர் வழியில் சுப விரயங்கள் அதிகரிக்கலாம், அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது.

**இடபம்** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொழிலில் புதிய திட்டங்களைக் கையாள்வீர்கள், விருந்து விழாக்களில் கலந்து மகிழ்வீர்கள்.

**மிதுனம்** உடல் நலம் சீராகி உற்சாகமடையும், தொழிலில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் குறையும், வீட்டைப் பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், சுவாரஸ்யமான நாள்.

**கடகம்** விருந்தினரை வரவேற்று வியப்படையும் நாள், வியாபார விருத்தியுண்டு, பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, புத்திரர்களின் தேவைகளை நிறைவு செய்து மகிழ்வீர்கள்.

**சிங்கம்** சிந்தித்து செயற்பட்டு சிறப்படைய வேண்டிய நாள், தாய்வழி அனுகூலமுண்டு, சேமிப்பை உயர்த்துவதில் அக்கறை காட்டுவீர்கள், சிந்தனை மிகுதியான நாள்.

**கன்னி** எடுத்த செயலை எளிதில் செய்து முடிப்பீர்கள், உடன் பிறப்புக்கள் உங்களுக்கு உதவிக்கரம் நீட்ட முன் வருவர், உற்சாகத்தோடு செயற்படும் நாள், போசன சுகமுண்டு.

**துலாம்** எதிர்பாராத வகையில் பணவரவு வந்து சேரலாம், பெரிய மனிதரின் ஒத்துழைப்பால் விரும்பிய பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம்.

**விருச்சிகம்** பயணத்தால் பலன் கிடைக்கும், விழாக்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, ஆதவன் வழிபாடு குதூகலம் தரும், எடுத்த காரியத்தை முடிக்க அதிகம் பாடுபடுவீர்கள்.

**தனுசு** தாராளமாகச் செலவு செய்து மகிழும் நாள், தொழிலில் இடமாற்றம், ஊர்மாற்றம் ஏற்படலாம், நண்பர்கள் வழியில் சிறு விரயங்கள் ஏற்படும், திட்டமிட்ட பயணமொன்றில் திடீர் மாற்றங்கள் செய்யப்படலாம்.

**மகரம்** விட்டுத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள், மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம், குடும்ப சுகமுண்டு, எடுத்த கருமங்கள் சரியாக நடைபெறும்.

**கும்பம்** செவி குளிரும் செய்திகள் வந்து சேரும் நாள், தொழில் நலன் கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றி தரும், நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும், ஆரோக்கியமான நாள்.

**மீனம்** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் நாள், சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும், தொழில் ரீதியான பயணம் அனுகூலம் தரும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 70 |
| உருளைக்கிழங்கு | 80 | 60 | 80 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 100 |
| தக்காளி | 30 | 40 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 45 | 60 | 50 |
| கோவா | 30 | 30 | 60 |
| கரட் | 50 | 65 | 80 |
| பூசணி | 25 | 40 | 25 |
| புடோல் | 30 | 60 | 60 |
| வாழைக்காய் | 40 | 30 | 30 |
| சின்ன வெங்காயம் | 70 | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 | 70 |
| பாகற்காய் | 80 | 90 | 80 |
| வெண்டிக்காய் | 70 | 70 | 70 |
| கரணைக்கிழங்கு | -- | 120 | 80 |
| பயற்றங்காய் | 120 | 130 | 100 |
| லீக்ஸ் | 50 | 40 | 60 |
| பீற்றூட் | 15 | 25 | 30 |
| கறிமிளகாய் | 70 | 60 | 70 |
| முருங்கைக்காய் | 90 | 180 | 100 |
| போஞ்சி | -- | 110 | 90 |
| கத்தரி தம்புள்ள | 70 | 40 | 30 |
| கீரை - 1 பிடி | 10 | 15 | 30 |
| தேசிக்காய் | 120 | 110 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 30 | 30 |

# கண்ணீர் அஞ்சலி



# திருமதி சிவபாக்கியம் ஆறுமுகம்

லயன் E.S.P.நாகரத்தினம்(P.M.J.F), நல்லூர் (உரிமையாளர் E.S.P.நாகரட்ணம் அன்கோ, கஜமுகன் ஹாட் வெயர் அன்ட் S.P.N மோட்டர்ஸ்) அவர்களின் அன்பு மாமியார் திருமதி சிவபாக்கியம் ஆறுமுகம் அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

பணியாளர்கள்,
E.S.P.நாகரத்தினம் அன்கோ, கஜமுகன் ஹாட்வெயர்,
S.P.N மோட்டர்ஸ்,
E.S.P.நாகரத்தினம் அன்கோ, கிளிநொச்சி.

(சி-4302)

## வன்னி வான்பரப்பில் மிக் விமானம் பறந்ததால் மக்கள் குழப்பம்

(முல்லைத்தீவு)

வன்னி வான்பரப்பில் இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான மிக் மிகை ஒலி விமானங்கள் இரண்டு நேற்று தாழப்பறந்து வட்டமிட்டதால் மக்கள் குழப்ப நிலை அடைந்தனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

நேற்று அதிகாலை வன்னி வான் பரப்பில் பறந்த இரண்டு மிகை ஒலி விமானங்கள் தாழப்பறந்து தாக்குதல் நடத்துவது போல ஒலி எழுப்பியிருக்கின்றன. இவற்றின் ஒலியினால் குழந்தைகள், முதியவர்கள் கடந்த காலங்களை நினைவுபடுத்தி மனத் தாக்கத்திற்கு உட்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அரை மணி நேரத்திற்கும் மேலாக முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்தச் சம்பவம் நிகழ்ந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## இலங்கைத் தூதுக்குழுவினர் 8ஆம் திகதி ஜெனீவா பயணம்

ஜெனீவாவில் எதிர்வரும் 12ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையின் 18ஆவது கூட்டத்தொடரில் கலந்துகொள்ளும் இலங்கைத் தூதுக்குழுவினர் எதிர்கட்சி 8ஆம் திகதி ஜெனீவாவுக்கு விஜயம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்கத்தின் சார்பில் பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க, நீர்ப்பாசன முகாமைத்துவ அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, சுற்றாடல் இயற்கைவள அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா, சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் மற்றும் வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட குழுவினர் ஜெனீவா மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளதாக நம்பகரமாக தெரியவருகின்றது.

ஜெனீவா கூட்டத் தொடரில் எதிர்வரும் 12ஆம் திகதி இலங்கையின் சார்பில் தூதுக் குழுவின் தலைவர் அமைச்சர் மகிந்த சமரசிங்க உரையாற்றவுள்ளார்.

இதேவேளை, இலங்கை தூதுக்குழுவினர் ஜெனீவா செல்வதற்கு முன்னர் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அங்கு விஜயம் மேற்கொண்டு முக்கியஸ்தர்களை சந்திப்பார் என்று தெரியவருகின்றது.

மனித உரிமைப் பேரவையின் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளை சந்தித்து இலங்கை நிலைமைகள் தொடர்பில் பீரிஸ் விளக்கமளிப்பார் என்று வெளிவிவகார அமைச்சின் தகவல்கள் உறுதிப்படுத்தின. இதேவேளை, இலங்கையின் சார்பில் மனித உரிமை பேரவை அலுவலக வளாகத்தில் வெளிமட்ட கூட்டங்களை நடத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கையின் முன்னேற்ற நிலைமை, போருக்கு பின்னரான அபிவிருத்திகள், வடக்கு-கிழக்கில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், முக்கிய நடவடிக்கையாக அவசரகால சட்டம் நீக்கப்பட்டமை உள்ளிட்ட பல்வேறு வேலைத்திட்டங்கள் தொடர்பில் அமைச்சர் மகிந்த சமரசிங்க தனது உரையில் தெளிவுபடுத்துவார் என தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-2)

## நிபுணர்குழு குறித்த அடுத்தகட்ட நடவடிக்கைக்கு பான் கீ மூன் தயார்



(கொழும்பு)

ஐ.நா. நிபுணர்குழு அறிக்கையை ஐ.நா. சபையின் வேறு நிறுவனங்களுக்கு சமர்ப்பிப்பது குறித்து ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் ஆராய்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

நிபுணர் குழு தொடர்பிலான அடுத்த கட்ட நடவடிக்கைக்கு பான் கீ மூன் தயாராகி வருவதாக அவருடைய பதில் பேச்சாளர் பர்ஹான் ஹக் தெரிவித்துள்ளார்.

நிபுணர் குழு அறிக்கை ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவையில் சமர்ப்பிக்கப்படுமா என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இததேளை, நிபுணர்குழு அறிக்கை தொடர்பில் பான் கீ மூன் எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுடன் பேச்சுவார்த்தை நடத்தியதை பர்ஹான் ஹக் உறுதிப்படுத்தியுள்ளார். (ஸ்ரீ-2)

## புதையல் திருடர்களால் சரித்திர பிரசித்திவாய்ந்த இடங்களுக்கு பாதிப்பு

புதையல் திருடர்களின் செயற்பாடுகள் காரணமாக நாட்டிலுள்ள சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பல இடங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தொல்பொருள் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆய்வுகள் மற்றும் அகழ்வாராய்ச்சிகளின் போது வரலாறு தொடர்பான உரிய தகவல்களை பெற்றுக் கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக பேராசிரியர் ஒஸ்மன்ட் போபே ஆராச்சி கூறியுள்ளார். பழைமை வாய்ந்த தூபிகளும் புத்தர் சிலைகளுமே அதிகளவில் புதையல் திருடர்களால் சேதமாக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## சிறுவர் துஷ்பிரயோக வழக்குகளுக்கு 6 வாரங்களில் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு தீர்மானம்

### சட்டமா அதிபர் திணைக்களம் நடவடிக்கை

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான வழக்குகளை ஆறு வாரங்களுக்குள் முடிவுக்கு கொண்டுவரும் புதிய செயற்றிட்டமொன்றை ஆரம்பிக்க சட்டமா அதிபர் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பொலிஸ் மற்றும் நீதியமைச்சுடன் இணைந்து இந்த செயற்றிட்டத்தை செயற்படுத்தவுள்ளதாக பிரதி சொலிசிஸ்டர் ஜெனரல் பாலித்த பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

தற்போது சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான வழக்கு விசாரணைகள் தாமதமடைவதாகவும், இதனால் பாதிக்கப்படும் சிறுவர்கள் பாரியமன உளைச்சலுக்கு உள்ளாவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

விசாரணைகளை துரிதப்படுத்தும் புதிய செயற்றிட்டம் பரீட்சார்த்தமாக ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி அனுஷ்டிக்கப்படும் சிறுவர் தினத்தையொட்டி பொலநறுவை மற்றும் கம்பஹா மாவட்டங்களில் முன்னெடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பாக பொலிஸார், நீதிவான்கள் மற்றும் வைத்திய அதிகாரிகளை தெளிவுபடுத்தும் கருத்தரங்கொன்று எதிர்வரும் 6ஆம் திகதி நடைபெறவுள்ளதாக பிரதி சொலிசிஸ்டர் ஜெனரல் பாலித்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின் கீழ் அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான நடவடிக்கைக்களை மேற்கொள்வதற்கான அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை குறித்த அதிகாரி ஒரு வாரத்திற்குள் நிறைவுசெய்து சிறுவர் பாதுகாப்பு பிரிவின் உதவி பொலிஸ் அத்தியட்சகரிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அதன் பின் குறித்த நபருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும்ணவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான வழக்குகளை துரிதமாக விசாரித்து முடிப்பதற்கு நீதிவான் இணக்கம் தெரிவித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## விளக்கமறியல் கைதிகளால் சிறைக்குள் நெருக்கடி

சந்தேகநபர்களை விளக்கமறியலில் வைப்பதற்கு பதிலாக மாற்று நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்கான வாய்ப்பு உள்ளதாக முன்னாள் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தற்போது அநேகமான சந்தர்ப்பங்களில் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படும் சந்தேகநபர்கள் விளக்கமறியலில் வைக்கப்படுகின்றனர். இதன் காரணமாக சிறைச்சாலைக்குள் அநாவசியமான முறையில் நெருக்கடி ஏற்படுவதாக அவர் தெரிவிக்கின்றார். (ஸ்ரீ-4)


## சித்தா மருத்துவம்

வாதம், பாரிசவாதம், அழல்வாதம், நீரிழிவு, சிறுநீரக அழற்சி, சூதகவலி, பாலியல் குறைபாடு, வெள்ளைபடுதல், அதி இரத்தமுக்கம், நெஞ்சுக்குத்து, நரம்புத்தளர்ச்சி, உடற் பருமன், மெலிவு, சோரியாசிஸ். கிரந்தி, கரப்பன், கணை, குளோகோமா, இளநரை, பொடுகு முதலான சகல நோய்களுக்கும் பேரறிஞர் Dr.K. பாலசுப்பிரமணியம் சிறப்பு ஆலோசகர் அவர்களை இம்மாதம் 4,5,6 ஆகிய திகதிகளில் சுன்னாகத்தில் சந்திக்கலாம்.

சந்திப்பதற்கு தொலைபேசி:- Dr.K.சிவானந்தன்
0777047371 ஆனந்தா வைத்தியநிலையம்
0757390195 காவல்துறை முன்பாக
0771005971 ஸ்ரேசன் றோட், சுன்னாகம்.
(சி-4306

## EBF-HBCA

புதிய இலவச சிங்கள வகுப்புக்கள் நடைபெறுவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விரும்பும் மாணவர்கள், தொழில் புரிபவர்கள் விண்ணப்பிக்கலாம். மற்றும் விபரங்களுக்கு கீழ்க்காணும் முகவரிக்கு தொடர்புகளை மேற்கொள்ளவும்.

கிழமை நாட்கள் மட்டுமன்றி சனி, ஞாயிறு ஆகிய நாட்களிலும் வகுப்புக்கள் நடைபெறும்.

தொடர்புகளுக்கு:-

**Europa Bildungs Forum**

இல. 29, பழம் வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 0217200157
மின்னஞ்சல் முகவரி :- eulankaforum.ev@gmail.com
இணையத்தள முகவரி :- www.hindubuddhist.com
(சி-4294)

## ஜேர்மன் மொழி வகுப்புகள் ஆரம்பம்

திருமண பந்தத்துக்காக ஜேர்மன் நாட்டு விசாவுக்கு விண்ணப்பிப்பவர்களுக்கான A1 சான்றிதழ் பெற விரும்புவோர் மற்றும் ஜேர்மனி, சுவிஸ், ஆஸ்திரிய நாட்டு பல்கலைக்கழக அனுமதி பெறுவோருக்கான ஆரம்ப டச் (Deutsch) மொழி வகுப்புகள் நடைபெறும்.

எம்மிடம் Deutsch மொழிக்கான நூல் நிலையம், இறுவட்டுக்கள், அப்பியாசப் புத்தகத்துடன் கேள்விகொத்துகள் மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படும்.

**Europa Bildungs Forum**

இல. 29, பழம் வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 0217200157
(சி-4295)

## மலேசியா

தமிழ் பேசும் பெண்களுக்கு
ஓர் அரிய வாய்ப்பு
மலேசியாவில் உள்ள
தமிழ் VIP வீடுகளுக்கு
தமிழ் பேசும் பணிப் பெண்கள் தேவை

மாதாந்த சம்பளம் RM 850
இலங்கைப் பெறுமதிக்கு ரூபா. 28,000

* கடவுச்சீட்டு (Passport) - இலவசம்
* மெடிக்கல் (Medical) - இலவசம்
* இன்சூரன்ஸ் (Insurance) - இலவசம்
* விமான டிக்கட் (Air Ticket) - இலவசம்
* தங்குமிடவசதி (Accomodation) - இலவசம்
* உணவு (Food) - இலவசம்
* 2 வருட கால ஒப்பந்தம் (2 Years Contract)

பாஸ்போட் இல்லாதவர்கள் உரிய ஆவணங்கள் கொடுத்தால் இலவசமாக பாஸ்போட் செய்து தரலாம் — முற்றும் இலவசம்

Labour Licence No. 2516
GOODLINE MANPOWER SERVICES
38/3, (3rd Floor), Symonds Road, Maradana, Colombo-10.
Tel : 011 3091521 Hotline : 077 3179592
(சி-4300)

## உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் திட்டத்தில் வடக்கு- கிழக்கு பல்கலைக்கழகங்கள் புறக்கணிப்பு

(கொழும்பு)

இலங்கையில் அமைந்துள்ள பல்கலைக் கழகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை சர்வதேச தரத்துக்கு உயர்த்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. ஆனால் வடக்குக் கிழக்கில் அமைந்துள்ள பல்கலைக்கழகங்களை இத் திட்டத்தில் இணைத்துக் கொள்ளாமல் அரசாங்கம் புறக்கணித்துள்ளது. இது குறித்து மேலும் தெரிய வருவதாவது,

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் வெளிநாட்டு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கு இலங்கை அரசாங்கம் முடிவு செய்திருந்தது. அவ்வகையில் வெளிநாட்டு மாணவர்களிடம் இருந்து இவ்வாண்டு விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதிலும் அவர்களிடமிருந்து பெருமளவு விண்ணப்பங்கள் கிடைக்கவில்லை.

இலங்கைப் பல்கலைக்கழகங்கள் தேவையான அடிப்படை வசதிகளைக் கொண்டிருக்கவில்லை என்பதே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இலங்கையில் அமைந்துள்ள ஆறு பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த 600 மில்லியன் ரூபாவைச் செலவிட உயர்கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது.

இதன்படி கொழும்பு, பேராதனை, மொறட்டுவ, றுகுணு, களனி மற்றும் சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகங்களுக்கு தலா 100 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு அப் பல்கலைக்கழகங்களின் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படவுள்ளன. (ஸ்ரீ-4)

## உள்ளூராட்சித் தேர்தலில் ம.தி.மு.க. போட்டியிடும்

### வைகோ அறிவிப்பு

(மயிலாடுதுறை)

தமிழக உள்ளூராட்சித் தேர்தலில் ம.தி.மு.க. போட்டியிடும். இதற்கான கட்சி சார்பிலான அறிவிப்பு 2 நாட்களுக்குள் வெளியிடப்படும் என ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறையில் வெள்ளிக்கிழமை அவர் அளித்த பேட்டியில், ராஜீவ்காந்தி கொலை வழக்கில் சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோருக்கு விதிக்கப்பட்ட தூக்கு தண்டனைக்கு எதிராக தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் வரலாற்றுச் சிறப்புமிக்கது.

இந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொண்ட தமிழக முதல்வர் ஆதரவு தெரிவித்த சட்டப்பேரவை உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தீர்மானம் நிறைவேற்றிய தமிழக முதல்வரையும் அரசையும் எதிர்க்கவும் விமர்சனம் செய்யவும் சில சக்திகள் கிளம்பியுள்ளன. இதை முறியடிக்கவும் பதில்களைத் தருவதற்கும் என்னைப் போன்றவர்கள் கடமைப்பட்டுள்ளோம் என்பதுடன் தமிழக முதல்வருக்கு உறுதுணையாக இருப்போம். உச்ச நீதிமன்றத்தில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு குடியரசுத் தலைவரால் கருணை மனு நிராகரிக்கப்பட்ட பின்னரும் தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்ட சம்பவம் அண்டை மாநிலத்தில் நடைபெற்றுள்ளது.

தற்போது தனித்த நிலையில் உள்ள ம.தி.மு.க. தலைமை மீதும் கட்சியின் மீதும் பற்றும் நல்லெண்ணமும் வைத்திருக்கிற மக்களின் கூட்டோடு தமிழக உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவோம் என்றார் வைகோ. (ஸ்ரீ-2)


# NEW SCIENCE HALL

கன்னாதிட்டி யாழ்ப்பாணம்

## A/L 2012 DAY CLASS

*2011 AUG A/L* பரீட்சைக்குத் தோற்றியவர்கட்குரியது

◇ கணித, உயிரியல் பிரிவு ◇

திங்கள் தொடக்கம் வெள்ளி வரை

COM. MATHS :- திரு.S. செந்தில்ராஜ், திரு.P. செந்தில்நாதன்
7.30-8.30

BIQLOGY :- வழமையான ஆசிரியர் - திரு.T. கெங்காதரன்
7.30-8.30

PHYSICS :-திரு.R. குகன்
8.30.-10.00

CHEMISTRY :-திரு.K. சிவத்திரன்
10.00-11.30

(சி-4309)

**ஆரம்பம்:- 09.09.2011 வெள்ளி காலை 7.30 AM**


## வலி.கிழக்கில் அனுமதியின்றி மலசலகூடம் அமைப்போருக்கு எதிராக நடவடிக்கை

### பிரதேச சபை செயலாளர் எச்சரிக்கை

(அச்சுவேலி)

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் முறையான அனுமதிபெறாது மலசலகூடங்கள் அமைக்கப்பட்டு வருவதாக வலிகாமம் கிழக்கு பிரதேசசபை செயலாளர் திருமதி ஜே.சோமராஜ் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் முறையான அனுமதி பெற்றுக் கொள்ளுமாறு மலசலகூடங்கள் அமைக்கப்பட்டு வருவதனால் குடிநீர் அதிகளவில் அசுத்தமடைந்து வருகின்றன. இவ்விடயம் தொடர்பாக பல முறைப்பாடுகள் எமக்கு கிடைத்துள்ளன.

எனவே மலசலகூடம் அமைப்பவர்கள் அனைவரும் பொதுச்சுகாதார பரிசோதகர், பிரதேச சபையின் அனுமதி பெற்றபின்னர் அமைக்க வேண்டும் என கேட்டுக் கொண்டதுடன் தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கையினையும் எதிர்கொள்ள நேரிடும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ஸ்ரீ-4-70)


Limited Seats Only

NIBM
BUILDING COMPETENCIES

## A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான பிரிவுகள் ஆரம்பம் 11-09-2011

Certificate in computer science - 4 Months
Certificate in Business Management - 4 Months
Foundation course in Human Resourse Management - 2 Months
Certificate in English Language - 4 Months
Advanced certificate in English Language - 4 Months

பதிவுகளுக்கு - 077 071 6974, 021 222 0360
இல 40 கல்லூரி வீதி,
(யாழ் இந்துக்கல்லூரி முன்பாக)
யாழ்ப்பாணம்.

(சி/4305)

## வினைத்திறன் காண் தடைப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் சிறுதொழில் முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவின் தொழில் முயற்சி அபிவிருத்திப் பயிற்சி அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் நடத்தப்படவுள்ளது.

எனவே மேற்படி பதவிக்கு தகுதியுடைய விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப் படிவங்களில் தமிழுடன் ஆங்கிலத்திலும் பூரணப்படுத்தப்பட வேண்டும்.

தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைகள் திணைக்களம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை) பெலவத்தை பத்தரமுல்லை என்னும் முகவரிக்கு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 3 ஆம் திகதிக்கு முன் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

இவ் வினைத்திறன் காண் பரீட்சை தொடர்பான மேலதிக விபரங்களை இம்மாதம் 2 ஆம் திகதி வெளியாகிய வர்த்தமானிப் பத்திரிகையிலோ அல்லது வலம்புரிக் காரியாலயத்திலோ பார்வையிட முடியும். (ஸ்ரீ-4)

# 2015 இல் நாட்டின் தனிநபர் வருமானம் 5 ஆயிரம் டொலர்களாக அதிகரிக்கப்படும்

## அமைச்சர் பசில் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் தனிநபர் வருமானத்தை 2015 ஆம் ஆண்டளவில் ஐந்து ஆயிரம் டொலர்களாக மாற்றுவதுடன் மனைப் பொருளியல் பிரிவொன்றை ஏற்படுத்துவதற்கும் திட்டமிட்டுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதன்மூலம் இலங்கையை வறுமையற்ற நாடொன்றாக மாற்றுவதற்கு எதிர்பார்த்துள்ளதாக அலரிமாளிகையில் இடம்பெற்ற 2012 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவு திட்டத்தை தயாரிப்பதற்கான ஜனாதிபதியுடனான கலந்துரையாடலின் போது அமைச்சு இதனை சுட்டிக்காட்டியுள்ளது.

அமைச்சின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர 2015 ஆம் ஆண்டு வரையிலான அனைத்து பொருளாதார திட்டங்களை இதன்போது தெளிவுபடுத்தினார். நாட்டின் மொத்த பொருளாதார அபிவிருத்தி மனைப்பொருளியல் வரையில் பகிர்ந்து செல்லும் வகையில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் திவிநெகும, கமநெகும போன்ற பிரதேச அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் 9 பிரதேச அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மற்றும் சுற்றுலாத்துறையின் திட்டங்கள் தொடர்பிலும் இதன் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டின் 20 மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில் 2011 ஆம் ஆண்டுக்காக 65 ஆயிரத்து 889.8 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.



13 ஆயிரத்து 101 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கும் வகையில் இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக பிரதி அமைச்சர் லஷ்மன் யாப்பா அபேவர்த்தன நேற்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் தெரிவித்தார். (ஸ்ரீ-4)

## அடேலுக்கு எதிராக வழக்குத் தொடர சிங்கள அமைப்புக்கள் முயற்சி



தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கத்தின் துணைவியார் அடேல் பாலசிங்கத்திற்கு எதிராக வழக்குத் தொடரப்படவுள்ளதாக லங்கா புவத் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. பிரிட்டன் வாழ் சிங்கள அமைப்புக்கள் இவ்வாறு வழக்குத் தொடரவுள்ள்தாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிறுவர் போராளிகளுக்கு சயனைட் வழங்கியமை மற்றும் சிறுவர்களை போராட்டத்தில் ஈடுபட வழிகாட்டியமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படவுள்ளன.

மற்றுமொரு நாட்டைச் சேர்ந்த சிறுவர், சிறுமியரை கொலை செய்வதற்கு அடேல் பாலசிங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக வழக்குத் தொடரப்படவுள்ளது. அடேல் பாலசிங்கம் சிறுவர்களுக்கு சயனைட் வழங்கும் காட்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் சிறுவர் போராளிகள் தற்கொலைத் தாக்குதல்களில் உயிரிழந்துள்ளதாக லங்கா புவத் செய்தி வெளியிடுள்ளது. (ஸ்ரீ-2)

## அரச சான்றிதழுடன் கூடிய இலவச தொழிற்பயிற்சி

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டு வேலைவாய்ப்பினை முதன்மை நோக்கமாகவும் உள்நாட்டு தொழிலாளர்களை உருவாக்கும் முகமாகவும் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது முதன்முதலாக யாழ். மாவட்டத்தில் அரசாங்க சான்றிதழுடன் கூடிய இலவச தொழிற்பயிற்சி ஒன்றை நாளை திங்கட்கிழமை ரில்கோ ஹோட்டலில் காலை 8.30 மணிக்கு நடத்தவுள்ளது.

இப்பயிற்சியில் ஹோட்டல் உபசரணையாளர் (Steward) கற்கை நெறியை 12 நாட்கள் இலவசமாக பயிற்றுவித்து சான்றிதழை வழங்கவுள்ளது.

மேற்படி பயிற்சியில் 50 மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் மாவட்ட இணைப்பாளர் இரா.அகிலன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## தர அறிக்கை சமர்ப்பிக்க முன் சீமெந்து விநியோகிக்கப்பட்டமை குறித்து விசாரணை

(கொழும்பு)

தேசிய கூட்டுறவு சங்கத்தினால் பாகிஸ்தானில் இருந்து கொண்டுவரப்பட்ட சீமெந்துக்கான தரச்சான்றிதழை பெற்றுக் கொள்வதற்கு முன்னர் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டமை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணை இறுதிக் கட்டத்திற்கு வந்துள்ளதாக இலங்கை சுங்கத் திணைக்களத்தின் பொருட்கள் ஆய்வுப்பிரிவின் பணிப்பாளர் எஸ்.டி. எஸ். குணதுங்க தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த விசாரணை அறிக்கைக்கு அமைய அடுத்தகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். அத்தோடு அதன் உற்பத்தி நிறுவனத்தின் தர அறிக்கை தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த நிலையில் தேசிய கூட்டுறவு சங்கம், குறித்த சீமெந்தை இறக்குமதி செய்துள்ளது.

சீமெந்தை சந்தைக்கு விநியோகிப்பதற்கான தர அறிக்கை கட்டாயமானது என்பதோடு குறித்த சீமெந்து அந்த அறிக்கை கிடைக்கு முன்னரே சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

தர அறிக்கை கிடைக்கும் வரையில் களஞ்சியப்படுத்தி வைப்பதற்காக துறைமுகத்தில் இருந்து கூட்டுறவுக்கு வெளியேற்றப்பட்ட சீமெந்தே விநியோகிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த சீமெந்தை பலவந்தமாக சுங்கத்திடம் இருந்து பெற்றுக் கொள்ளவில்லை என கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-4)

## முன்னாள் புலி உறுப்பினர்களில் மேலும் 1000 பேர் விரைவில் விடுதலை

### புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு

(கொழும்பு)

புனர்வாழ்வளிக்கப்பட்ட மேலும் ஆயிரம் முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களை அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சந்தனவானகுரு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இவர்கள் இன்னும் இரண்டு வாரங்களில் சமூகத்துடன் இணையவுள்ளதாகவும் இந்தக் குழுவினர் விடுவிக்கப்பட்டதன் பின்னர் புனர்வாழ்வளிக்கப்படும் முன்னாள் விடுதலைப் புலி அமைப்பின் உறுப்பினர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 700 ஆக குறைவடையுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதில் நீதிமன்ற உத்தரவின் பேரில் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட முன்னாள் விடுதலைப் புலி அமைப்பின் உறுப்பினர்கள் 700 பேரும் அடங்குவதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-4)

## அரசாங்கத்தின் புதிய சட்டம் தொடர்பாக உன்னிப்பாக அவதானிக்கிறது அமெரிக்கா

அவசரகாலச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களைக் கையாள்வதற்கு இலங்கை அரசாங்கம் கொண்டு வரும் புதிய சட்டம் தொடர்பாக உன்னிப்பாக அவதானித்து வருவதாக அமெரிக்கா கூறியுள்ளது.

நியூயோர்க்கில் நேற்று முன்தினம் நாளாந்த செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பிரதிப் பேச்சாளர் மார்க் ரோனர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

முன்னாள் போராளிகளுக்குப் புனர்வாழ்வு அளிப்பதில் இலங்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை எட்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

போரின் முடிவில் சரணடைந்த மற்றும் கைது செய்யப்பட்ட சுமார் 11 ஆயிரம் விடுதலைப்புலிகள் இயக்கப் போராளிகளில் 8 ஆயிரம் பேர் விடுவிக்கப்பட்டுள்ளது முக்கியமான ஒரு விடயம் என்றும் மார்க்ரோனர் கூறியுள்ளார். அதேவேளை இன்னமும் தடுப்புக் காவலில் உள்ள கைதிகள் மீது இலங்கை அரசாங்கம் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் அல்லது அவர்களை விடுதலை செய்யவேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இலங்கையில் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்ட பின்னர் புதிய சட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்படுவது குறித்து பலரும் கவலை கொண்டிருப்பதை தாம் அறிவோம் என்றும் கூறியுள்ள மார்க்ரோனர் இந்தச் சட்டம் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பது குறித்து தாம் உன்னிப்பாக அவதானிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை இலங்கையில் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டுள்ளதானது மக்கள் இயல்பு வாழ்வுக்குத் திரும்புவதற்கான முக்கியமான தொரு நகர்வு என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து உரிய விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என்ற அமெரிக்காவின் நிலைப்பாட்டை மீள நினைவுபடுத்த விரும்புவதாகவும் மார்க்ரோனர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## இலங்கையின் கொலைக்களத்திற்கு போட்டியாக அரசின் காணொளி

### ஐ.நா.வில் காண்பிக்கப்படவுள்ளது

சனல்-4 தொலைக்காட்சி தயாரித்து வெளியிட்ட இலங்கையின் கொலைக்களங்கள் ஆவணப்படத்துக்குப் போட்டியாக அரசாங்கம் தயாரித்துள்ள ஆவணப்படமும் ஐ.நா. வளாகத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

Lies Agreed Upon என்ற பெயரில் இலங்கை பாதுகாப்பு அமைச்சு தயாரித்துள்ள இந்த ஆவணப்படத்தை ஐ.நா. வளாகத்தில் நாளை மறுதினம் பிற்பகல் 2 மணியளவில் திரையிடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் பங்கேற்குமாறு ஐ.நா.வை தளமாகக் கொண்டு செயற்படும் ஊடகவியலாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆவணப்படம் திரையிடப்பட்ட பின்னர் ஐ.நா.வுக்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி கலாநிதி பாலித கோஹணவும் பிரதி வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வாவும் கேள்விகளுக்குப் பதிலளிக்கவுள்ளனர்.

இலங்கையின் கொலைக்களங்கள் ஆவணப்படம் ஐ.நா. வளாகத்தில் உள்ள தேவாலய நிலையத்தில் முன்னர் திரையிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# மற்றொரு கோணம்



## வாழ்க்கை என்றால் இலட்சியத்தோடு வாழவேண்டும்!

**வாழ்வின் எல்லாமே மோசமான அனுபவங்களாய் இருக்கின்றன. இந்த வாழ்க்கையை நான் எப்படி இனிமையானதாக மாற்றுவது?**

உங்கள் அனுபவத்தினுடைய கசப்பு என்பது நிகழ்ந்த நிகழ்வுகளால் ஏற்பட்டது அல்ல. ஓர் அனுபவத்தை நீங்கள் பெற்றுக் கொண்ட முறையால் நிகழ்ந்தது. ஒரு மனிதனுக்கு கசப்பாக இருப்பது இன்னொரு மனிதனுக்கு ஒரு வரமாக தோன்றக்கூடும். எப்போதும் துன்பத்திலேயே இருக்கக்கூடிய ஒரு மனிதன்

**ஆன்மீகம் 31**

ஒரு கல்லறையில் தன் தலையை முட்டி மோதி அழுது கொண்டிருந்தான். 'ஓ! என் வாழ்க்கை எவ்வளவு அர்த்தமற்றதாக ஆகிவிட்டது. நீபோய் விட்டதால் என் வாழ்க்கை இந்நிலைக்கு வந்து விட்டதே. நீ மட்டும் வாழ்ந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும். உன்னை இந்த உலகத்திலிருந்து பிரித்துக் கொண்டு போன விதிதான் எவ்வளவு கொடுமையானது' என்றெல்லாம் கதறிக் கொண்டு இருந்தான். அருகே இருந்த ஒரு மதபோதகர் 'இங்கே புதைக்கப்பட்ட மனிதர் எனக்கு மிகவும் முக்கியமான மனிதன் என்று நினைக்கிறேன்' என்று ஆறுதலாகச் சொன்னார். 'ஆமாம்' என்று இன்னும் அதிகமாக அழுது கொண்டு அந்த மனிதன் சொன்னான். 'இங்கே புதைக்கப்பட்டிருப்பவன்தான் என் மனைவியின் முதல் கணவன்' என்று. எனவே இந்தக் கசப்பு இப்போது நடந்ததால் நேர்ந்ததல்ல. அதை உணர எப்படி உங்களை நீங்களே அனுமதிக்கிறீர்கள். எப்படி ஏற்றுக் கொள்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது.

எல்லாச் சூழ்நிலையிலும் எது தேவையென்று உங்கள் விழிப்புணர்வு சொல்கிறதோ உங்கள் தகுதிக்கிருப்பதைச் செய்யுங்கள்.

மக்கள் திரும்பத் திரும்ப என்னிடம் கேட்பது. உங்கள் இலட்சியம் என்ன என்பது, எனக்கு எந்த இலட்சியமும் இல்லை. நான் வெறுமனே இருக்கின்றேன் என்று சொன்னால், நான் ஏதோ விளையாட்டுக்குச் சொல்வதாகக் கருதுகிறார்கள். இந்த உலகத்தில் வாழ்வது பற்றி நான் வெளிப்படுத்தக்கூடிய ஆழமான செய்தி இதுவாகத்தான் இருக்க முடியும் என்பது அவர்களுக்கு தெரியவில்லை. எனக்கென்று தனியாக பற்று ஏதுமில்லாததால் என்ன வேண்டுமோ அதைச் செய்து கொண்டிருக்கிறேன்.

**கோபத்திற்கு வெளிச் சூழ்நிலை காரணம் இல்லையென்று கடந்த இதழில் குறிப்பிட்டிருந்தீர்கள் இதைப் பற்றி விளக்கம் கூறுங்கள்?**

நீங்கள் யார் மீது கோபப்படவில்லை. நீங்கள் கோபமாக இருந்தீர்கள். உங்கள் கோபத்திற்கும், இன்னொருவருக்கும் எந்த சம்பந்தமுமில்லை. நீங்கள் பாறை மீதுகோபமாயிருக்கிறீர்களா, உங்கள் குரு மீது கோபமாயிருக்கிறீர்களா கோபம் என்றால் கோபம்தான். இது இன்னொன்றோ, இன்னொருவரோடோ செய்வதற்கு ஏதுமில்லை. இதை முதலில் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். உங்கள் கோபம் பிறரோடு எந்த விதத்திலும் தொடர்புபட்டதல்ல. முழுக்க முழுக்க உங்களோடு தொடர்புடையதுதான். உங்கள் கோபம் இன்னொருவரோடு நிகழ்வது என்று நினைப்பதால் தான் நீங்கள் திரும்பத் திரும்ப கோபப்படுகிறீர்கள்.



அது உங்களை மட்டுமே சார்ந்தது என்று நீங்கள் அறிந்திருப்பீர்களேயானால் அது இவ்வளவு நேரம் உங்களிடம் இருக்காது.

எனவே ஏதோ ஒன்றைப் பற்றி கோபப்பட்டு வருத்தப்படுவது என்பது நான் சொன்னாலும் சரி, பிறர் சொன்னாலும்சரி, இது ஓர் ஆழமான விருப்பு, வெறுப்பின் விளைவாக வருவது. இந்த ஆழமான விருப்பு, வெறுப்பு என்பது ஒரு குறிப்பிட்ட மன நிலை, உணர்வு நிலை அல்லது வாழ்க்கை முறையின் வெளிப்பாடு அல்லது அடையாளம். அதுதான் சிந்திப்பதற்கும் வாழ்வதற்கான சிறந்த வழி. இதுதான் சிந்திப்பதற்கும் உணர்வதற்குமான வழி என்று நீங்கள் கருதுவதால் நிகழ்வது. அதற்கு யாரும் ஒத்துவராவிட்டாலும் உங்களுக்கு கோபம் வருகிறது. உங்கள் விருப்பு, வெறுப்புகள் வலிமையாகின்ற போது உங்கள் அடையாளங்கள் ஆழமாகிற போது நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு எதிராக போகிறீர்கள். இது எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது என்று சொன்னால் புறக்கணிப்பும் வளர்கிறது. எனவே விடுதலைக்கான வழி எல்லாவற்றையும் உங்களுக்குள்ளே சேர்த்துக் கொள்வதே தவிர, சிலவற்றை விலக்குவதல்ல. ஒன்றை விலக்குவதன் மூலம் நீங்கள் மறுபடியும் சிக்கிக் கொள்கிறீர்கள். எல்லாவற்றையும் சேர்த்துக் கொள்வதன் மூலம் நீங்கள் விடுதலை அடைகிறீர்கள்.

**மனநோய் பிடித்தவர்களைப் பார்த்தால் அச்சப்படுகிறேன். அவர்கள் ஏன் அப்படி இருக்கிறார்கள்?**

இன்று மனிதர்களில் 90 சதவிகிதம் பேர் வெவ்வேறு விதமான மனநோய்க்கு ஆளாகியிருக்கிறார்கள். அந்த மனநோயின் அளவு, சில சமயம் கையாளாகக் கூடியதாய் இருக்கிறது. சிலசமயம் கைமீறிப் போகிறது. உங்களுக்கு ஆஸ்துமா இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம் சில நேரங்களில் ஆஸ்துமா கையாளக்கூடிய தாய் இருக்கிறது. பல நேரம் கைமீறிப் போகிறது. அப்பொழுது எல்லாம் உங்களை நோயாளி என்று கருதுவதில்லை. ஏதோ ஒரு மருந்தையோ மாத்திரையையோ சாப்பிட்டு சமாளித்துக் கொள்கிறீர்கள். ஒரு குறிப்பிட்ட நாளில் இந்த நோய் அதிகமாகிறது. ஒன்று நீங்கள் இறந்து போக வேண்டும் அல்லது மருத்துவமனைக்குப் போக வேண்டும். அப்போதுதான் உங்களை நோயாளி என்று நீங்கள் கருதுகிறீர்கள்.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

# செவ்வியல் தமிழ் இலக்கியத்தில் பெண் மொழி

**02**

பெண் மொழி பற்றிய சிந்தனை இப்போது வலுவடைந்துள்ளது. இலக்கியப் படைப்பில் பெண் மொழியின் தேவையை க.பஞ்சாங்கம் பெண் மொழி படைப்பு என்னும் நூலிலே வருமாறு கூறியுள்ளார்.

"படைப்புத் தளத்தில் பெண்ணுக்கான சொல்லாடலை உருவாக்கிவிடும் முறையில்தான் ஒட்டு மொத்தமாக மானுட சமூகத்திற்கான விடுதலை வந்து வாய்க்க வாய்ப்புண்டு. அதற்கும் தமிழ் பெண் எழுத்தாளர்கள் கடுமையான தியாக வாழ்வை மேற்கொண்டாக வேண்டும்".

தொல்காப்பியருடைய நூற்பாவின் விளக்கத்தை பஞ்சாங்கம் விமர்சனம் செய்து இத்தகைய கருத்தினை வெளியிட்டுள்ளார். காதல் மொழி பேச காதலனுக்கு மட்டும் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. பெண்ணின் உணர்ச்சி பெருக்கு மொழியால் வெளிப்படுத்த முடியாதுள்ளது என அவர் ஆதங்கப்படுகிறார்.

"தன்னுறு வேட்கைக் கிழவன்முற்கிளத்தல்
எண்ணுங்காலை கிழத்திக்கு இல்லை"

"தற்புகழ் கிழவி கிழவன் முன்கிளத்தில்
எத்திறத்தாலும் கிழத்திக்கு இல்லை"

மேற்காட்டப்பட்டுள்ள இரு தொல்காப்பிய நூற்பாவும் பஞ்சாங்கத்தை பின்வரும் கருத்து வெளிப்பாட்டுக்கு ஆளாக்கியுள்ளது.

"தலைவியின் கூற்றுக்களாகத் தொகுக்கப்பட்டுள்ள கூற்றுக்களை மொத்தமாக தொகுத்துப் பார்த்தால் களவுக்காலத்தில் அவருடைய கூற்று களவு கற்பில் முடிய வேண்டுமே என்ற கவலையினால் நிகழ்கிறது. கற்புக்காலத்தில் ஆண் மகனின் பரத்தை ஒழுக்கத்தை எதிர்கொள்ள அவளுடைய பேச்சு நிகழ்கிறது. எனவே இந்தக் கூற்றுகளும் அவளுடைய இன்ப உணர்வுகளைச் சாராமல் சமூகக் கடமையை நோக்கியவனாக இருக்கின்றன என்பதும் கவனத்துக்குரியவை. இவ்வாறு தொல்காப்பியரால் பெண்களின் மொழி ஒடுக்கப்பட்டு ஆண்களின் மொழி உருவாக்கம் செய்யப்பட்

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

டிருக்கின்றது என்பது இப்போது தெளிவாகத் தெரிகிறது. இந்த மரபு தான் இன்றுவரை தமிழ் மரபில் நிலை பெற்று வருகிறது".

பெண்மொழி என்பது தன்னுடைய காதல் உணர்வுகளை ஆணிடம் எடுத்துரைக்கும் மொழி என இவர் குறுகிய நோக்கிலே கூறுவது நோக்கத்தக்கது. தொல்காப்பியர் சங்க இலக்கியப் பாடல்களில் பதிவு செய்யப்பட்ட அக வாழ்வையும் புறவாழ்வையும் விளங்கிக் கொள்ளப்பட்ட பொருளிலக்கணத்தை வகுத்துள்ளார். செவ்வியல் தமிழிலக்கியங்களில் பெண் கூற்றாக வந்த பாடல்களில் பேசப்பட்ட மொழி பற்றிய ஆழமான தேடலை மேற்கொண்ட போது பெண்மொழி பற்றிய விளக்கச் செய்திகளைக் காண முடிந்தது. பெண் மொழி ஒடுக்கப்படவில்லை என்பதற்கு அகப்பாடல்களே சான்றாக உள்ளன.

தொல்காப்பியமும் பெண் கூற்று நிலைகளைச் சிறப்பாக வகுத்துக் கூறியுள்ளதைச் செவ்வியல் தமிழ் இலக்கியத் தொகுப்பில் ஒன்றை மட்டும் எடுத்து நுணுக்கமாக ஆராயும் போது கண்டுகொள்ளமுடிகிறது. எனவே இக்கட்டுரை குறுந்தொகைத் தொகுப்பு நூற்பாடல்களை அடிப்படையாகவும் ஆய்வு வரையறையாகவும் கொண்டு சில விளக்கங்களை முன் வைக்கவுள்ளது.

அகப் பாடல்களில் பெண் மொழி சிறப்பான பெயர்களால் குறிப்பிடப்பட்டுள்ளது. சின்மொழி, குறுமொழி, தேமொழி, மடமொழி எனப் புலவர் பெண்கள் பேசிய மொழியை இனங்காட்ட முயன்றுள்ளனர். சில மொழிகளைப் பேசும் பண்பு பெண்களிடம் இருந்துள்ளது. தலைவன் தலைவியுடனே பேசும் போது அவள் மிகக் குறைந்த சொற்களையே பயன்படுத்தியுள்ளாள். அவளுடைய பேச்சுப்பற்றிய தலைவன் கூற்றைக் குறுந்தொகைப் பாடல் வருமாறு பதிவு செய்துள்ளது.

"அமிழ்து பொதி செந்தா அஞ்ச வந்த
வார்ந்திலங்கு வையெயிற்றுச் சின்மொழி அரிவை"

இப்பாடலில் வரும் 'சின்மொழி' அரிவை என்ற தொடர் பெண்ணின் மொழியின் தன்மையையும் விளக்கி நிற்கிறது. பெண்ணின் வயது நிலை அவளுடையவளர்ச்சி நிலைக்கேற்ப பேதை, பெதுமை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் என வகுக்கப்பட்டிருந்தது. அகப்பாடல்களில் இச் சொற்களின் பயன்பாடு இக்கருத்தை உறுதிசெய்கிறது.

நற்றிணைப்பாடல் "குறுமகள்" சில்மொழி எனப் பெண்ணின் பேச்சைக் குறிப்பிட்டுள்ளது. அகநானூறு முள்ளேயிற்றுச் சின்மொழியரிவை எனவும் கலித்தொகை சின் மொழியெனவும் குறிப்பட்டுள்ளன. பிறகால இலக்கியங்களிலும் 'சின் மொழி' பற்றிய குறிப்புக்கள் உள்ளன.

'குறுமொழி'யென்பது பெண்ணினுடைய இழிந்த பேச்சைக் குறிப்பதாக உள்ளது. நற்றிணையில் இத்தகைய மொழிபேசும் எ... பற்றிய பதிவு காணப்படுகின்றது.

(தொடரும்)

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்,**
**முன்னை நாள் ஆய்வாளர்,**
**ஜப்பான்-கக்குசுயின் பல்கலைக்கழகம்.**

# யுத்தத்தின்போது 30 சதவீதமான சிறுவர்கள் காணாமல் போயுள்ளனர்

## ஐ.நா. சிறுவர் நிதியம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற யுத்த நிலைமைகளின் போது 30 சதவீத மான சிறுவர்கள் காணாமல் போயுள் ளனர் என்றும் இவர்கள் தவிர சுமார் இரண்டாயிரம் பேர் காணாமல் போயு ள்ளனர் எனவும் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற உள் நாட்டு போரின் கடைசி கட்டத்தில் பிரிந்து சென்ற நபர்களை கண்டு பிடித்து அவர்களை குடும்பத்துடன் இணைக்க ஒரு முக்கியமான திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக யுனி செப் என அழைக்கப்படும் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் தெரிவித் துள்ளது.

யுனிசெப்பின் இந்நடவடிக்கை கடந்த 2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்த பின் அரசாங்கத் தின் ஒத்துழைப்புடன் ஆரம்பமா னது. இந்த வேலைத் திட்டத்தில் முன்னேற்றங்கள் பலவற்றை கண் டுள்ள யுனிசெப் நிர்க்கதியான பல சிறுவர்களை அவர்களது குடும் பத்துடன் ஒன்றிணைத்துள்ளது.

எனினும் மேலும் நூற்றுக்கண க்கான சிறுவர்கள் காணாமல் போயுள்ளதுடன் இளைஞர்கள் பற் றிய விபரங்களும் தெரியவில்லை. காணாமல் போயுள்ள சிறுவர்களை கண்டுபிடிக்கும் நோக்கில் யுனிசெப் நிறுவனத்தின் பிரதிநிதிகள் வட பகு தியில் இரண்டு மாவட்டங்களில் பணி புரிந்து வருகின்றனர்.

உள்ளூர் அரச அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் யுனிசெப்பின் இத் திட்டம் தற்போது விரிவுபடுத்தப்பட் டுள்ளது. இறுதிக் கட்ட யுத்தின் போது குறைந்தது 582 சிறுவர்கள் காணாமல் போயிருக்கலாம் என யுனிசெப் கணிப்பிட்டுள்ளது.

இவ்வாறு காணாமல் போயுள்ள வர்களை கண்டுபிடித்துத் தருமாறு தமக்கு முறைப்பாடு கிடைத்துள்ள தென யுனிசெப் நிறுவனம் குறிப் பிட்டுள்ளது. இதுவரையில் 45 சிறு வர்கள் கண்டுபிடிக்கப்பட்டு அவர் களது குடும்பத்துடன் இணைக்கப் பட்டுள்ளதோடு மேலும் 57 சிறுவர் களை தேடும் பணிகள் ஆரம்பிக்க ப்பட்டுள்ளன.

இறுதிக் கட்டட யுத்தத்தில் 30 சதவீத சிறுவர்கள் காணாமல் போன தாகவும் அவர்களின் மூன்றில் ஒரு பகுதியினரை விடுதலைப்புலிகள் பணிக்கமர்த்தியதாகவும் யுனிசெப் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை வயதுக்கு வந்த வர்கள் 2 ஆயிரம் பேர் காணாமல் போயுள்ளமை குறித்து தமக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள் ளதாக கூறியுள்ள யுனிசெப் அவர் களின் விபரங்கள் தெரியவில்லை என்றும் கூறியுள்ளது. (ஸ்ரீ-2)

# வெளிநாட்டு நிறுவனங்களுக்கு காணிகள் விற்பனை செய்யப்படமாட்டாது

## பிரதியமைச்சர் யாப்பா அறிவிப்பு

(கொழும்பு)

பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய சீன நிறுவனமான ஷெங்ஸ்ரீலா காணி கொடுக்கல்- வாங்கல் தொட ர்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை அடுத்து எதிர்காலத்தில் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு காணிகளை விற்பனை செய்யப்போவதில்லை எனவும் 30 வருடங்களுக்கு மாத் திரம் காணிகளை குத்தகைக்கு கொடு ப்பது எனவும் இலங்கை அரசாங் கம் தீர்மானித்துள்ளது.

எதிர்காலத்தில் வெளிநாட்டு முத லீட்டாளர்களுக்கு குத்தகைக்கு மாத் திரமே காணிகளை வழங்க அர சாங்கம் தீர்மானித்துள்ளதாக பொரு ளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக் களத்தில் நேற்று முன்தினம் நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பில் அவர் இதனை குறிப்பிட்டுள் ளார்.

கொழும்பு நகரில் சுற்றுலா விடு திகள் மற்றும் உலக வர்த்தக மையம் என்பவற்றை நிர்மாணிக்க குத்தகை அடிப்படையிலேயே அரச காணிகள் வெளிநாட்டு நிறுவனங் களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இவற் றில் இருந்து குறைந்த வருமா னமே அரசாங்கத்திற்கு கிடைத்து வருகிறது எனவும் பிரதியமைச்சர் கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

# நாட்டுக்கு எதிராக பாரிய சதித்திட்டம்

## அமைச்சர் விமல் [illegible]டிக்காட்டு



(கொழும்பு)

நாட்டுக்கு எதிராக பாரியளவில் சதித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தேசிய சுதந்திர முன்ன ணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இந்தியா மற்றும் காலணித்துவ நாடுகள் இலங்கையை பிரிவினை வாத சூழ்ச்சியில் சிக்க வைப்பதற்கு தீவிர முயற்சி எடுத்து வருகின்றன.

இந்தச் சதி வலைகளில் அர சாங்கம் சிக்கிவிடக்கூடாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் சிஸ்சிறிபாய வில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பொருளாதார மற்றும் அரசியல் ரீதியில் மேற்குலக நாடுகள் இல ங்கை மீது ஆதிக்கம் செலுத்த முய ற்சிக்கின்றன.

நாட்டை பிளவுபடுத்தும் முயற் சிகளுக்கு இடமளிக்கப்படக்கூடாது என அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# இலங்கையில் 5879 யானைகள் உள்ளன

நாட்டில் 5ஆயிரத்து 879யானை கள் உள்ளதாக அண்மையில் நடத் தப்பட்ட யானைகள் தொகை மதிப் பீடு காட்டியுள்ளது. இதன்படி ஆசி யக் கண்டத்திலேயே அதியுயர் காட்டு யானை அடர்த்தி கொண்ட நாடு இலங்கை என கமநல சேவைகள் மற்றும் வன விலங்கு அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்துள் ளார்.

இந்தத் தொகை மதிப்பீட்டின் படி ஆயிரத்து 107 குட்டியானைகளும் 122 கொம்பன் யானைகளும் உள் ளன. மகாவலி பிராந்தியத்திலேயே ஆகவும் கூடிய எண்ணிக்கையில் ஆயிரத்து 751 யானைகள் செறி ந்து காணப்படுவதாக புள்ளி விபர ங்கள் காட்டியுள்ளன.

மத்திய அளவில் 47 யானை கள் காணப்படுகின்றன. கிழக்கு பிராந்தியத்தில் ஆயிரத்து 573 யானைகளும் வடக்கு, கிழக்கு பிராந்தியத்தில் ஆயிரத்து 189 யானை களும் தென்பிராந்தியத்தில் ஆயிர த்து 086 யானைகளும் உள்ளதாக இந்த ஆய்வு காட்டியுள்ளது.

குட்டி யானைகள் அதிகளவில் காணப்படுவது நாட்டில் யானைகள் பெருகி வருவதன் அடையாளம் என அமைச்சர் கூறினார்.

300 யானைகளை வீட்டு வள ர்ப்புக்காக பிடிப்பதற்காகவே இந்த தொகை மதிப்பீடு செய்யப்படுவதாக சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கூறு வதை மறுத்துள்ள அமைச்சர் ஏதோ காரணத்தால் தனித்து நிற்கும் யானை களும் பின்னவெல சரணாலயத்தி லிருந்து தெரிவு செய்யப்படும் யானை களும் மட்டும்தான் கோவில்களு க்கு கொடுக்கப்படும் எனவும் வேறு எந்த யானையும் காட்டிலிருந்து பிடிக்கப்பட்டு வளர்ப்புக்காக கொடு க்கப்படமாட்டாது எனவும் கூறி னார். (ஸ்ரீ-2)

# 2011.09 04 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 476- கடைசி ரோமப் பேரரசன் ரொமூலஸ் ஆகுஸ்டஸ் முடிதுறந்தான்.

★ 1666- லண்டன் மாநகரில் மூன்று நாட்க ளாக இடம்பெற்ற பெரும் தீ விபத்தில் 13, 000 இற்கும் அதிக மான வீடுகள் அழிந்தன.

★ 1781- லொஸ் ஏஞ்சல்ஸ் நகரம் ஸ்பானிய ஆளுநராக ஃபிலிப்பே டி நெவெ என்பவரால் அமைக்கப்பட்டது.

★ 1870- பிரான்ஸ் மன்னன் நெப்போலியன் பதவியில் இருந்து அகற்றப்பட் டான். அரசி யூஜின் தனது பிள்ளைகளுடன் இங்கிலாந்துக்குத் தப்பி ஓடினாள். மூன்றாவது குடியரசு அமைக்கப்பட்டது.

★ 1884- குற்றவாளிகளை அவுஸ்திரேலியா வின் நியூ சவுத் வேல்சுக்கு அனுப் பும் கொள்காஇயை பிரித்தானியா கைவிட்டது.

★ 1888- தான் கண்டுபிடித்த படம் பிடிகரு விக்கு ஜோர்ஜ் ஈஸ்ட்மன் கோடாக என்பதை வர்த்தகக் குறியீடாக காப்புரிமை பெற்றுக் கொண்டார்.

★ 1939- இரண்டாம் உலகப் போர்: நேபாளம் ஜேர்மனி மீது போரை அறிவித்தது.

★ 1939- இரண்டாம் உலகப் போர்: ஐரோப் பியப் போரில் ஐப்பான் நடு நிலையை அறிவித்தது.

★ 1951- கண்டங்களுக்கிடையேயான முதலா வது நேரடித் தொலைக்காட்சி ஜப்பானில் இடம்பெற்ற அமைதி மாநாட்டில் இருந்து கலிபோர்னி யாவின் சான் பிரான்சிஸ்கோ நகருக்கு ஒளிபரப்பப்பட்டது.

★ 1956- வன்தட்டு நினைவகத்தைக் கொண்ட உலகின் முதலாவது கணனியை ஐ.பி.எம். அறிமுகப்படுத்தியது.

★ 1972- ஐக்கிய அமெரிக்காவின் மார்க் ஸ்பிட்ஸ் ஜேர்மனியின் மியூனிக் நகரில் இடம்பெற்ற 1972 ஒலிம்பிக் போட்டிகளில் நீச்ச லில் ஏழாவது தங்கப் பதக் கத்தைப் பெற்று சாதனை படைத்தார்.

★ 1978- அண்ணா பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.

★ 2006- இஸ்ரேலின் டெல் அவீவ் நகரின் பாடசாலை ஒன்றின் அடியில் கி.மு.முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படும் ஒரு புதைகுழிக் குகை ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது.

★ 2007- சூறாவளி ஃபீலிக்ஸ் நிக்கராகு வாவைத் தாக்கியதில் பலத்த நிலச்சரிவுகளும் உயிரிழப்புக்க ளும் ஏற்பட்டன.

பிறப்பு

★ 1971- லான்ஸ் க்லூஸ்னர் , தென்னா பிரிக்க துடுப்பாட்டக்காரர்.

இறப்பு


★ 2006- ஸ்டீவ் ஏர்வின், அவுஸ்திரேலிய இயற்கை ஆர்வலர் (பி.1962)



1870- பிரான்ஸ் மன்னன் நெப்போலியன் பத வியிலிருந்து அகற்றப்பட்டான்.

# இருப்பாய் தமிழா நெருப்பாய்!

சீமானின் அதிரடித் தொடர் 3



"இலை மலர்ந்தால் ஈழம் மலரும்" என சீமான் எப்படிச் சொல்லலாம்?

கடந்த பாராளுமன்றத் தேர்தலின் போதே என்னைத் திணறடிக்கத் துடித்த கேள்வி இது. ஈழத்தில் இரத்த ஆறு ஓடிக் கொண்டிருந்த நேரத்திலும் "இலையை எப்படி ஆதரிக்கலாம்?" என்கிற கேள்வி என் மீது பாய்ச்சப்பட்டது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தல் நேரத்தில் மரியாதைக்குரிய ஜெயலலிதா அம்மையார் "தனித் தமிழீழம் தான் ஒரே தீர்வு" என முழங்கினார். "ரவிசங்கர்ஜி காட்டிய காணொளிகள் கண்டு துடித்துப் போனேன். ஈழப் பிரச்சினைக்குத் தீர்வு காண இந்திய இராணுவத்தை அனுப்ப நடவடிக்கை எடுப்பேன்.

பாகிஸ்தானிலிருந்து பங்களாதேசை பிரித்துக் கொடுத்ததுபோல் தனி ஈழத்திற்கும் தீர்வு காண்பேன்" என அவர் அறிவித்தபோது தமிழகமே

## தமிழனின் தன்மானம் காத்தவர் ஜெயலலிதா அம்மையார்

திரண்டு கைதட்டியது. ஈழத்துச் சொந்தங்கள் நம்பிக்கை கீற்று முளைத்த மகிழ்வில் விடிவுக்கு ஏங்கினார்கள்.

ஆனால், இங்கிருக்கும் சிலரோ அம்மையார் அரசியல் இலாபத்துக்காக திடீர் அக்கறை காட்டுகிறார் என்றார்கள். அப்போது நான் ஒரு மேடையில் சொன்னேன்.

அந்த அம்மையார் அரசியலுக்காக ஈழம் பற்றிப் பேசுகிறார் என்றால் நீங்கள் அதற்காகக் கூட ஈழத்தைப் பற்றி பேச மறுக்கிறீர்களே... இது எந்த ஊர் நியாயம்? என கேள்வி எழுப்பினேன்.

அதுகாலம் வரை தலைவர் பிரபாகரனுக்கோ தனித் தமிழீழத் தீர்வுக்கோ ஜெயலலிதா அம்மையார் எதிராக இருந்தவர்தான். ஆனால், இரத்தமும் சதையுமாக நம் சொந்தங்கள் தத்தளித்து நின்றபோது சிங்கள அரசின் சிண்டைப் பிடித்தவர் அவர். எங்களின் இழவு வீட்டுக்கு ஆறுதல் சொல்ல வந்த உறவு! அவரை ஆதரித்ததில் என்ன தவறு? காங்கிரஸை வீழ்த்த என்கைக்கு கிடைத்த ஆயுதம் இல்லை.

பெரிய குளத்தில் பிரசாரத்தை முடித்துவிட்டு அறைக்குத் திரும்பிய நேரம். என் அண்ணன் ரவி யாரோ சூசைன்னு ஒருத்தர் பேசினார். பத்து நிமிடம் கழித்து பேசச் சொன்னேன் என்றார் என் அலைபேசியை நீட்டியபடி. ஒரு கணம் துடித்துப் போனேன். நினைத்த நேரத்தில் எல்லாம் அலைபேசியில் பேச என் பக்கத்து ஊர் நண்பரா சூசை? என் தலைவன் பிரபாகரனின் கடற்படைத் தளபதி, ஆயுதங்களை மட்டுமல்ல... அன்பைச் சுமக்கவும் அகன்ற மார்பு கொண்ட வல்லமைக்காரன். எந்தக் குரலைக் கேட்பதற்காக நான் ஏங்கிக் கிடந்தேனோ... அந்தக் குரல் சில நிமிடங்களுக்கு முன்னால் என் அலைபேசியில் ஒலித்தும் கேட்க முடியாமல் போய் விட்டது.


அலைபேசியை இறுகப் பற்றிய படி தவிப்போடு காத்திருந்தேன். அழைப்பு வந்தது. அண்ணா தலைவர் எப்படி இருக்கிறார்? தவிப்போடு கேட்கிறேன்.

என்னைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம் எனச் சொல்லுங்கள். சீமானை நம்பிக்கையோடு களமாடச் சொல்லுங்கள் என தலைவர் சொல்கிறார் என்றார் சூசை அண்ணன். பேசும் போது இருமிக்கொண்டே இருந்தார்.

நச்சுக் குண்டுகளை ஆமிக்காரன் வீசிக்கொண்டே இருக்கிறான். திரும்பிய பக்கம் எல்லாம் புகை. அதான் இருமல் தீரலை. எம்மைப் பற்றி விசனப்படவேண்டாம். நீங்கள் கவனம்... கவனம். பரப்புரையின்போது சோனியா காந்தி அம்மையாரையோ கலைஞர் அய்யாவையோ விமர்சிக்காதீர்கள். அது தவறு. நமது சோகங்களைச் சொன்னால் போதும். கவனம்! எனச் சொன்னவர் இறுதியாக மயிலாடுதுறையில் மணிசங்கர் ஐயரும் திருச்சியில் சாருபாலாவும் முந்துவதுபோல் தகவல் வருகிறது. அங்கே பரப்புரையைப் பலப்படுத் துங்கள்! என்றார்.

எங்களுடைய பயணத் திட்டத்தில் திருச்சியும் மயிலாடுதுறையும் அப்போது இல்லை. இங்கே உள்ள ஆட்களின் உளவுத் தகவல் வேண்டுமானால் தப்பலாம். எங்கள் அண்ணன்களின் உளவுத் தகவல் மிகச் சரியாக இருக்கும். அதனால் திருச்சியிலும் மயிலாடுதுறையிலும் இலையை ஆதரித்து தீவிர பரப்புரை செய்தோம். மிகக் குறைவான வாக்குகள் வித்தியாசத்தில் அந்த இரு தொகுதிகளிலும் இலை வென்ற போது





தான் புலிகளின் புலனாய்வு வல்லமை புரிந்தது.

காங்கிரஸ் கருவறுக்கப்படுகிற காலம் கடந்த பாராளுமன்றத் தேர்தலின் போதே தொடங்கி விட்டது. ஆனால் அப்போது தேர்தல் நேரத்தில் ஈழம் குறித்துப் பேசிய ஜெயலலிதா இனிமேல் பேசமாட்டார். அவருடைய பசப்புரையை சீமான் போன்றவர்கள் பரப்புரையாக நம்பி விட்டார்கள் எனச் சொன்னார்கள் பலரும்.

அதனாலோ என்னவோ... இப்போதைய சட்டமன்றத் தேர்தல் பரப்புரையின் போது மரியாதைக்குரிய ஜெயலலிதா அம்மையார் ஈழம் குறித்து எதுவும் பேசவில்லை. அவர் ஈழம் குறித்து வாய்திறக்கவில்லை என வருத்த புராணம் பாடியவர்கள் கூட கடந்த தேர்தலில் ஈழம் குறித்துப் பேசாததுதான் வரலாற்றுத் துயரம்.

ஈழம் யுத்தத்திலும் இரத்தத்திலும் நனைந்து 500 ஆண்டுகள் ஆகிவிடவில்லை. வரலாற்றைத் தேடித் துளாவுகிற அளவுக்கு வருத்தங்கள் காலம் கடந்து போய் விடவில்லை. நம் இனத்தின் துயரங்கள் இன்றைக்கும் அங்கே தொடர்கின்றன. பசியும் பட்டினியும் கொலைக்கார அரசால் குரூரமாக ஏவி விடப்படுகிறது. உறவுகளைத் தேடும் ஒப்பாரிகள் ஓயவில்லை. விசாரணை என்கிற பெயரில் இழுத்துச் செல்லப் படுபவர்கள் இன்னமும் திரும்பவில்லை. வக்கிரத்தை இறக்கி வைக்கும் வடிகாலாக நம் இரத்த உறவுகள் பாலியல் வல்லுறவுகளுக்கு பலியாக்கப்படுவது தீரவில்லை.

இந்தத் துயரங்களை கடந்த தேர்தலில் நம்மைத் தவிர வேறு யாராவது இங்கே எடுத்து வைத்தார்களா? தொண்டைத் தண்ணீரின் கடைசி ஈரம் காயும்



வரை நான் கதறிய போதும் ஈழப் பிரச்சினையோ மீனவர் விவகாரமோ இந்தத் தேர்தலைப் பாதிக்காது என பரப்பினார்கள். ஒற்றை நாவாக ஒலித்த துயரமும் துடிப்பும் தானே இன்றைக்கு காங்கிரஸைக் கருவறுத்தது. உறவுகளைப் பற்றிப் பேச இங்கே ஒருவருமே இல்லையே என நாம் கதறிய போதும் அதையே பேசுறார் என இந்தத் தம்பிக்குத் தடை போட்ட நாக்குகளுக்கு மட்டும் பஞ்சமில்லை.

ஆனால் தேர்தல் முடிந்த பின்னர் ராஜபக்ஷவும் அவருடைய சகாக்களும் போர்க்குற்றவாளிகளாக அறிவிக்கப் பட வேண்டியவர்கள். இலங்கை மீது போர்க்குற்ற நடவடிக்கைகளை இந்தியா முன்னெடுக்காவிட்டால் போரை நடத்தியதே இந்தியாதான் என்கிற கருத்து உறுதியாகிவிடும் என எச்சரித்தார் ஜெயலலிதா.

வெற்றி அறிவிப்பு வெளியான நாளிலும் சிங்கள அரசுக்கு எதிரான கருத்துக்களை தமிழ் மக்களின் ஒருமித்த பிரதிநிதியாக இருந்து துணிச்சலாக எடுத்துரைத்தார். அதே துணிவுடன் இன்று தமிழகத்தின் முதலமைச்சரானவுடன் சட்டமன்றத்தில் தீர்மானமாகவும் நிறைவேற்றியுள்ளார். இது



உலகளாவிய தமிழர்களுக்கும் தமிழகத்து மைந்தர்களுக்கும் அவர் செய்திருக்கும் மகத்தான பணி! இதன் மூலம் தமிழர்களின் தன்மானம் உலக அரங்கில் உயர்த்திப் பிடிக்கப்பட்டுள்ளது.

தலைமைச் செயலக மாற்றம், சமச்சீர் கல்வி இரத்து, அதிகாரிகள் பணி மாற்றம் ஆகியவற்றை வைத்து அவர் இன்னும் மாறவில்லை என சிலர் அனுமானம் சொல்கிறார்கள். என்னைப் பொறுத்தமட்டில் பழைய நிலைப்பாட்டில் இருந்து அவர் மாறி விட்டதாக உறுதியாக நம்புகிறேன்.

தான் போகும்வரை யாரும் போக முடியாதபடி போக்குவரத்தை நிறுத்தி வைத்தவர் இன்றைக்குத் தான் போவதே தெரியக் கூடாது என்கிற அளவுக்கு மக்களோடு மக்களாகப் பயணிக்கிறார்.

காலில் விழுந்து கிடந்தவர்களை கண்டு கொள்ளாமல் நகர்ந்த காலம் போய் காலில் யாரும் விழக்கூடாது எனக் கட்டளை பிறப்பிக்கும் காலம் உருவாகி இருக்கிறது. ஆடம்பரமே அழகு என்கிற எண்ணம் மாறி எளிமையின் சின்னமாக அரசு விழாக்கள் அரங்கேறுகின்றன. தங்க நகை அணிவதற்கான காரணத்தைக் கூட மக்கள் மன்றத்தில் வைக்கி[illegible] அளவுக்கு அவருடைய மனப்போக்[illegible] மாறி இருக்கிறது.

நீங்களே சொல்லுங்கள்... இவை [illegible] வேற்கப்பட வேண்டிய மாற்றங்க[illegible] இல்லையா? (பொறிபறக்கும்)

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### தடுமாறும் மனங்கள்

தட்டு தருமாறி படாத பாடுபட்டு
பரீட்சையில் பாசாகி
பல படிகள் ஏறி
பவுசாக ஓர் உத்தியோகம்
கிடைத்த வேலையை
கருத்தாக முடிப்பதைவிட்டு
அடுத்த படி தாண்டி
அடுத்தவர் கதிரையை
எட்டிதள்ளி
அதில் அமர ஆசை
இருப்பதை கொண்டு
திருப்தி காணாமல்
அடுத்தவரை நோட்டமிட்டு
காலம் கடத்தி
அகமொன்று புறமொன்று வைத்து
எம்மவரிடம் கண்ணியமான
கடமையும் கட்டுகோப்பும்
எங்கிருந்து வரும் அதுவும்
இலவசமாக கிடைக்குமென்றால்
முட்டி மோதி
முண்டியடித்து கொண்டு
வருவார்கள்...

ஜனகன் கிஷா
அல்வாய் வடக்கு

### வேண்டும் மாற்றம்

விடியும் பொழுதை
வீணடிக்க வேண்டாம்
தடையற்ற வாழ்வில்
தடம் பதிக்க வேண்டும்

சிந்தனை வாழ்வில்
சிறகிழக்க வேண்டாம்
சிந்தித்து வாழ்வை
திறம்படுத்த வேண்டும்

பிறர் மனதை துன்புறுத்த
நீ எண்ண வேண்டாம்
உன் மனதை
உயர்வாக்க நீ எண்ண வேண்டும்

எவரையும் எடுத்தெறிந்து
நீ பேச வேண்டாம்
அனைவரையும் அன்பாலே
இணைத்திட வேண்டும்

பாசமாக இருப்பது போல்
வேசம் போட வேண்டாம்
நிஜமான உறவாக
நீ மாற வேண்டும்

கே.எஸ்.ரமணி
யாழ்.பல்கலைக்கழகம்

### அவரவர் பார்வையில்

இரத்தப்பலி
அறிக்கைகள் மூலம்
அழுக்குகள்
துடைக்கப்படாது
செய்யும் அநீதிகளின்
முறையாலும்
உங்கள் ஆயுள்
அதிகரிக்காது
தேசம்
எத்தனையோ
இதயங்களால்
காதலிக்கப்படாமல்
கிடக்கிறது
பயம்
இருளை விட
கறுப்பாய் இருக்கிறது
விடிந்த பின்னும்
வயிற்றில் உறங்குகிறது

செ.மோகன்ராஜ்
நெடுந்திவு-12

### அவலம்

வயிற்றின் நெருப்பை
போக்கிட
செருப்பு தைக்கிறான்
சின்னவன்
பேனா பிடிக்கவேண்டிய
பிஞ்சு விரல்கள்
ஊசியம் நூலுமாய்...
சாலையோரம்
அவன் கால்கள்
இன்றும்
செருப்பை
அணியவில்லை!

ஆ.முல்லைதிவ்யன்
(பொலிகையூர்)

### என் நிலவே!

நிழல்கள் இல்லாத
நிஜமான வாழ்வில்
உன்னை தொலைத்துவிட்டு
நிழல் ஆடும்
கனவினிலே
உன்னை தேடுகின்றேன்
தினமும்
இரவினிலே நிலவாய்
வருகின்றாய்
என் கனவினிலே

வி.கஜேந்திரன்
நெல்லியடி

### இமயம் தொட...

பற்றுக் கொள்
வாழ்வைப் புரிந்து கொள்
புயலின் போது நாணலாயும்
மழையின் போது
ஆலமரமாயும் மாறிச் கொள்
உன் உழைப்பை
உறுதிப்படுத்து
அதுவே வியர்வைத் துளிகள்
சன்மானம்...

மாவை நா.கஜேந்திரன்

### நித்தியத்தை நோக்கி

இறந்த காலம் பற்றிய
இயலாமையில்
நிகழ்காலத்தை
நிசப்தமாக்குவது
நியாமில்லைதானே

வருங்காலம் எமக்கானதே
வரலாறு மாற்றி
புதுயுகம் படைக்க
புறப்பட வேண்டிய
பாதையை நாமேதான்
செப்பனிட வேண்டும்

அரும்புகள் முகிழ்ந்திட
அவலங்கள் மறைந்திட
மீண்டும் நாம் நாமாக வாழ்ந்திட
பாதைகள் மாற்றி
பயணங்கள் தொடருவோம்
இழந்த சந்தோஷங்கள்
மீண்டும் துளிர்த்திடவே

ஆஷா, யாழ்ப்பாணம்.

## மௌனத்தின் தேடல் - 86



### மின்சாரம்

ஒற்றைக் கம்பியில்
ஒரு காலுன்றி
வயிற்றுப் பிழைப்புக்காய்
உயிரைப் பிடித்தபடி
உற்றுப் பார்க்கும் மானிடா
விக்கி விக்கி வரும்
மின்சாரத்தின்
சேதி என்னவாம்?

ஜனகன் கிஷா
அல்வாய் வடக்கு

### சாகசம்

உழைப்புக்காக
ஊசல் வடிவில் நிற்பது சாகசமா
அருளுக்காக
அக்கினியை ஏந்துவது சாகசமா
ஊருக்காக
உலகம் ஒளிபெற மின்கம்பத்தில்
ஏறுவது சாகசமே

யோகராஜா யாழவன்
யா/நெல்லியடி ம.ம.வி.

### யதார்த்தம்

வீதியிலிருப்பவை
மின் விளக்கல்ல- ஒளிராத
வீண் விளக்கென்று
இன்றுதான் அறிந்தனையோ?

எஸ்.காவ்யா
வடமராட்சி

### சாதனை

பிறர் நலனுக்காக
தன் உயிரை துச்சமாய்
மதித்த இவன்
மின் கம்பத்தில் ஏறி
ஊருக்கே ஒளி ஊட்ட
விரும்புகின்றான்
இவன் போல் எத்தனை....

சதிஸ்நிகா

### கவனம்

மின்சாரம் ஆபத்தானது
உயிரைப் பறிப்பது
அதை உணர்ந்து கவனமாய்
சீர்குலைந்த மின்
கம்ப மின் இணைப்புகளுக்கு
சிகிச்சை அளி மனிதா!

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

### கவலை

போர்தனிலே உன்
உறவை இழந்து
உன் வாழ்வின் இறுதிக்
கட்டம் என்றா
மின்கம்பத்தின் உச்சத்தில்
ஏறி நிற்கின்றாய்?
போதும் மனிதா!
நீ பட்ட கஷ்டம்!

கு.நிஸாத்தி, நீர்வேலி.

### பசி

உயரழுத்த மின்னோட்டம்
உச்சிக் கம்பத்தில்
உயிரைக் கையில் பிடித்து
உழைப்பதெல்லாம்
உன் வீட்டில் உலை
கொதிப்பதற்கா?

சி.சிவதர்சிகா
யா/ வட.இந்து மகளிர் கல்லூரி,
பருத்தித்துறை

### நிலை!

இருள் அகற்றி ஒளி ஏற்ற
இசைந்திடுதே இவர் நிலை!
அறியாமை எனும் இருள் அகற்ற
பிசைந்திடுதே
அதிகார நிலை!

பெ.சத்துருக்கன்
யாழ்ப்பாணம்.

### சோர்வடையாதே

இளைஞனே....
மின் கம்ப உச்சியில் நிற்கும் உனக்கு
மின் கம்பிகளால் வேலி போட்டாலும்
-சோர்வடையாதே
உன் சாதனை இமய மலையும் தாண்டி
விண்வரை செல்லட்டும்

நெய்தல்
தேன்மொழி

### அந்தரம்

அந்தரத்தில் நிற்பவரே
தமிழனின் வாழ்வே
உன்போன்ற அவலத்தில்தான்

ஏ.அன்பு
வடவரணி

### விஞ்ஞானி

உயரத்தில் ஏறும்
கடின உழைப்பு
துயரத்தை துடைக்கும்
விடிவெள்ளி
அயராது உழைக்க
ஓடிடும் கால்கள்
வியர்வை சிந்தும்
படிக்காத விஞ்ஞானி

க.அபர்ணா
வட்டுக்கோட்டை.

### உயர்வு

தன்னுயிரை
உவந்தளிக்கும்
உலகமகா சேவகனை
உயர்வு பெறச் செய்யவென
மன்னுயிரைப்
பணயம் வைக்கும்
உன்னதப் பணி!

வா.ஜெயபிரசன்னா
யா/ஹாட்லிக் கல்லூரி.

### எச்சரிக்கை

ஓ மின்சாரமே...!
உறவுகளின் விடியலுக்காய்
உருகிடும் நெஞ்சமதின்
உயிரைப் பறித்திடாதே
வாழ வைப்பவளோடு
வாழ்ந்திடப் பழகு-இல்லையே
வேரறுத்து உன்னை
வீழ்த்திடவும் அஞ்சோம்

வீ.விஸிஸ், சாந்தை கல்வி வ.சழகம்

## சங்குநாதம் மௌனத்தின் தேடல் - 87



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு 09.09.2011 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வ்ழங்கப்படும்.

-ஆசிரியர் -

## பாலஸ்தீனத்தின் தனிநாட்டு கோரிக்கைக்கு பூரண ஆதரவு அளிக்கப்படும்

### இலங்கை அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

பாலஸ்தீனத்தின் தனிநாட்டு கோரிக்கைக்கு ஆதரவளிக்கப்படும் என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது. இந்த மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைக் கூட்டத்தில் பாலஸ்தீனம் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைக்கவுள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பு பாலஸ்தீனத்தை சுயாதீன நாடாக அங்கீகரிக்க வேண்டுமென பாலஸ்தீன. பிரதிநிதிகள் கோரிக்கை முன்வைக்க உள்ளனர்.

பாலஸ்தீனத்தின் இந்த முனைப்புக்களுக்கு இலங்கை அரசாங்கத்தின் பூரண ஆதரவு அளிக்கப்படும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வாக்குறுதி அளித்துள்ளதாக இலங்கைக்கான பாலஸ்தீன தூதுவர் அன்வர் அல் அகா தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீன- இலங்கை நட்புறவு பேரவையின் தலைவராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மிக நீண்ட காலமாக பதவி வகித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

193 நாடுகளில் 124 நாடுகள் ஏற்கனவே தமது கோரிக்கைக்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்துள்ளதாகவும் இன்னமும் ஐந்து நாடுகளின் ஒத்துழைப்பு தேவைப்படுவதாகவும் அன்வர் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் கடமையாற்றி வரும் தமது நாட்டு தூதுவர்கள் ஆதரவு திரட்டும் முனைப்புக்களில் தீவிரமாக ஈடுபட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கும் பாலஸ்தீனத்திற்கும் இடையில் நெருங்கிய தொடர்பு காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். சுற்றுலாத்துறை உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் இரு நாடுகளும் புரிந்துணர்வுடன் செயற்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## மேற்குலக நாடுகளின் அழுத்தங்களை முறியடிக்க இந்தியா உதவவேண்டும்

### ராஜீவ விஜேசிங்க எம்.பி.கோரிக்கை

விடுதலைப்புலிகள் சார்புடைய புலம்பெயர் சமூகத்துடன் பேச்சுக்களை நடத்துமாறு மேற்குலக நாடுகள் கொடுத்து வரும் அழுத்தங்களை முறியடிக்க இந்தியா உதவ வேண்டும் என்று இலங்கை ஜனாதிபதி ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பனருமான பேராசிரியர் ராஜீவ விஜேசிங்க கேட்டுக் கொண்டுள்ளார்.

சென்னையில் ஹிந்து நாளிதழுக்கு அளித்துள்ள செவ்வி ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இலங்கையில் விடுதலைப் புலிகளின் கதை முடிந்து விட்டது என்பது தமக்குத் தெரியும் என்றும் ஆனாலும் வெளிநாடுகளில் உள்ள விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் பிரிவினைவாத வன்முறைகளைத் தூண்டும் வகையில் செயற்பட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

மேற்குலக நாடுகள் விடுதலைப்புலிகளுடன், அவர்களின் ஆதரவாளர்களுடன், நாடு கடந்த தமிழீழ அரசுடன் பேச்சு நடத்துமாறு வலியுறுத்தி வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

பிரிவினவாதக் கோட்பாடுகளுடன் இயங்கும் அவர்களுடன் பேசுவது சாத்தியமில்லை என்றும் இத்தகைய நிலையில் மேற்குலக அழுத்தங்களுக்கு இந்திய உதவ வேண்டும் என்றும் அவர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இலங்கைப் படையினர் போர்க் குற்றங்களில் ஈடுபட்ட சம்பவங்கள் குறித்து அடிப்படையான ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்பட்டால் மட்டுமே அதுபற்றி விசாரணைகளை நடத்த முடியும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

## சட்டவிரோதமாக கொரியாவில் தங்கியுள்ள இலங்கையர்களுக்கு எதிராக நடவடிக்கை

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் கொரியாவில் தங்கியுள்ள இலங்கையர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணிமனை இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த் பணிமனையின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க, தொழிலுக்கான ஒப்பந்த காலம் நிறைவடைந்த பின்னரும் பல இலங்கையர்கள் கொரியாவிலேயே தங்கியுள்ளதாக குறிப்பிட்டார்.

இது தொடர்பிலான தகவல்கள் தமக்கு கிடைத்துள்ளன.

அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர்கள் அவ்வாறு தொடர்ந்து கொரியாவில் தங்கி இருப்பதால் புதிய வேலைவாய்ப்புகளுக்காக இலங்கையர்களை அனுப்பி வைக்க முடியாது இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## 4 சிறுமிகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்த மதகுரு தொடர்ந்தும் விளக்கமறியல்

(கொழும்பு)

நான்கு சிறுமிகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்த மதகுருவைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைத்து விசாரணை செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஜாஎல பகுதியில் அமைந்துள்ள ஹார்வேஸ்ட் என்னும் சிறுவர் பராமரிப்பு இல்லத்தைச் சேர்ந்த நான்கு சிறுமிகளை குறித்த மதகுரு துஷ்பிரயோகம் செய்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட சிறுமிகளினால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சிறுமிகள் மருத்துவ பரிசோதனைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை மற்றுமொரு கிறிஸ்தவ அமைப்பின் சதித் திட்டமே இந்த பாலியல் குற்றச் செயல் குற்றச்சாட்டுக்கள் என குறித்த மதகுருவின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் சந்தேக நபருக்கு பிணை வழங்க முடியாது என நீதிமன்றம் அறிவித்துள்ளது.

குறித்த சந்தேக நபருக்கு எதிராக கண்டி நீதிமன்றிலும் சிறுவர் பாலியல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## மரண அறிவித்தல்

## திருமதி சிவபாக்கியம் ஆறுமுகம்



காரைநகர் களபூமியை பிறப்பிடமாகவும், இடைப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி.சிவபாக்கியம் ஆறுமுகம் அவர்கள் 01.09.2011 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி.முருகேசு அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஆறுமுகம் அம்பலவாணரின் அன்பு மனைவியும், கந்தசாமி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு சகோதரியும், கந்தசாமி (கனடா), சுப்பிரமணியம் (இலங்கை), விமலாதேவி (கனடா), அம்பலவாணர் (கனடா), தியாகராஜா (கனடா), நடராஜா (கனடா), தங்கமலர் (இலங்கை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கந்தையா (கனடா), நாகரத்தினம்(இ.எஸ்.பி.நாகரத்தினம் அன்கோ, கஜமுகன் காட்வெயர்-(இலங்கை), தவராணி (கனடா), தனலட்சுமி (இலங்கை), இராஜேஸ்வரி (கனடா), சுபத்திரா (கனடா), இராஜேஸ்வரி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும்,

ஸ்ரீகரன், ஸ்ரீதாரணி, ஸ்ரீகோகுலன், ஸ்ரீமைதிலி, நந்தினி, சுகந்தினி, சுகந்தராசா, மனோகரதாஸ், மனோரதி, மனோகௌரி, மனோதர்சினி, மனோபாலன், குருபரன், ஜீவிதா, வைகுந்தன், யுகேந்திரன், கவிதா, சயனுதா, பிரசாந்தி, பார்த்தீபன், கஜேந்திரன், கஜமுகன், கமலநேசன், கமலநாதன், கமலரூபன் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் (04.09.2011) இன்று ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று காலை 10 மணிக்கு சாம்பலோடை இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

இடைப்பிட்டி,
காரைநகர்.

தகவல்:-
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(சி4301)




இலங்கை தேசிய கைத்தொழில் சம்மேளனத்தின் 10-வது சாதனையாளர் வருடாந்த விருது வழங்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் இணுவிலைச் சேர்ந்த அண்ணா தொழிலக உரிமையாளரும் பிரபல தொழிலதிபருமான எஸ்.பி.நடராசா வெள்ளி விருதினைப் பெற்றுக்கொள்வதையும் மற்றும் விருது பெற்றுகொண்டோர் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலுடன் நிற்பதையும் படங்களில் காணலாம்.

# கொமர்ஷல் வங்கி இலாபம் அதிகரிப்பு

COMMERCIAL BANK

தனியார் வங்கியான கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பி.எல்.சி. நிறுவனமானது முதல் 6 மாத காலத்தில் மிகச் சிறந்த நிதி பெறுபேறுகளைக் காட்டியுள்ளது.

2011 ஜூன் 30-ல் முடிபடைந்த அரையாண்டு காலத்தில் வரிக்கு முந்திய இலாபமாகவும், நிதிப் பெறுமதி சேர்க்கப்பட்ட வரியாகவும் 6.528 பில்லியன் ரூபாயை பெற்றுள்ளது. இது 2010-ல் இதே காலப் பகுதியில் உழைக்கப்பட்ட வருமானத்தைவிட 24% அதிகமானதாகும்.

வரிக்குப் பிந்திய இலாபம் 74.3 வீத சாதனைமிக்க அதிகரிப்பை காட்டி 4 பில்லியன் ரூபாயாகப் பதிவாகியது. முன்னைய அரையாண்டுகளில் இவ்வளவு தொகையான இலாபம் ஈட்டப்பட்டமை இதுவே முதற்தடவையாகும்.

வர்த்தக செயற்பாடுகள் அதிகரித்துள்ளமை, உறுதியான வளர்ச்சி மற்றும் வரிகள் குறைக்கப்பட்டதால் வங்கிக்கு ஏற்பட்ட சாதகமான தாக்கம் என்பனவே இதற்கு முக்கிய காரணங்களாக இருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வங்கியின் வரிக்கு முந்திய இலாபம் (நிதி பெறுமதிசேர் வரிக்குப்பின்) 42.8 வீதமாக அதிகரித்தது. பெறுமதி சேர் வரி 458.7 மில்லியன் ரூபாயில் இருந்து 778.7 மில்லியன் ரூபாயாக ஆகியுள்ளது. இதற்கு காரணம் வட்டிவீதம் 2010 இல் 20 வீதத்தில் இருந்து 12 வீதமாக இவ்வருடம் குறைக்கப்பட்டமையாகும்.


மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட இந்த அரையாண்டில் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் என்பன 15.8 பில்லியன் ரூபாயால் அதிகரித்துள்ளது. இது 2010 டிசம்பரில் 228.3 பில்லியனாக இருந்து தற்போது 244.1 பில்லியனாக அதிகரித்துள்ளது. 2010 ஜூன் முதல் 2011 ஜூன் வரையான 12 மாத காலத்தில் இந்த அதிகரிப்பு 57.5 பில்லியனாகும். இது வருடாந்தம் 30.8 வீத தாக்கம்மிக்க வளர்ச்சியைக் காட்டியுள்ளது.

6 மாத காலத்தில் மொத்த வைப்புக்கள் 28.1 பில்லியன் அல்லது 10.8 வீதம் அதிகரித்துள்ளது. 2011 ஜூன் 30-ல் இத்தொகை 287.8 பில்லியனாக உள்ளது. ஜூன் 30-ல் முடிபடைந்த ஓராண்டு காலத்துக்குரிய வளர்ச்சி இப்பிரிவில் 45.5 பில்லியன் அல்லது 18.7 வீதமாகும்.

இது குறித்து கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் அமித குணரட்ண கூறுகையில்,

கடன் பதிவுகளின் ஆரோக்கியமான வளர்ச்சி மற்றும் வைப்புக்களின் வளர்ச்சி எனபன வர்த்தகத் துறையின் புத்துணர்ச்சியை பிரதிபலித்து நிற்பதோடு இப்பிராந்தியத்தின் மிகவும் ஸ்திரமான ஒரு நிதி நிறுவனம் என்பதனையும் தொடர்சியாக கொமர்ஷல் வங்கி தக்க வைத்து வருகின்றது என்றார்.

# செலிங்கோ லைஃப் காப்புறுதி சந்தா வருமானம் அதிகரிப்பு




செலிங்கோ லைஃப் ஆயுள் காப்புறுதி நிறுவனம் 2011 ஜூன் 30 இல் முடிபடைந்த ஆறு மாத காலத்தில் வருமானமாக 6.391 பில்லியன் ரூபாய்களை ஈட்டியுள்ளது. மொத்த பதிவு செய்யப்பட்ட சந்தா முதலீடு மற்றும் ஏனைய துறைகள் என எல்லாப் பிரிவுகளிலும் ஆரோக்கியமான வளர்ச்சி எட்டப்பட்டுள்ளது.

2010 ஜுன் முதல் ஆறு மாத காலத்தோடு ஒப்பிடுகையில் சந்தா வருமானம் 18.5 வீதத்தால் அதிகரித்து 4.663 பில்லியன்களாக உள்ளது. இது 7.30 மில்லியன் அதிகரிப்பாகும். முதலீடு மற்றும் ஏனைய வருவாய்கள் 8.4 வீதத்தால் அதிகரித்து 1.728 பில்லியன் ரூபாயாக உள்ளது.

ஆயுள் நிதியத்திற்கு 3.142 பில்லியன் ரூபாய் தேறிய மாற்றமாக செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆயுள் நிதியம் 10 வீதத்தால் ஆறு மாத காலத்தில் அதிகரித்து 2010 டிசம்பர் 31-ல் 31.8 பில்லியன்களாக இருந்து மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியில் 35 பில்லியன்களாக அதிகரித்துள்ளது. ஆயுள் நிதியத்திற்கான மாற்றம் கடந்த ஆண்டில் இதே காலப் பகுதியோடு ஒப்பிடுகையில் 15 வீதமாகவும் அதிகரித்துள்ளது.

செலிங்கோ ஆயுளின் முதலீடுகள் 1.7 பில்லியன்களாக அல்லது 6.7 வீதமாக கடந்த காலத்தின் இதேபகுதியோடு ஒப்பிடுகையில் வளர்ச்சியடைந்து 2011 ஜுன் 30 இல் 31.346 பில்லியன்களாக உள்ளது. அதேவேளை மொத்த சொத்துக்கள் முதல் அரையாண்டில் 39.8 பில்லியன்களாக அதிகரித்துள்ளன.

இந்தப் புள்ளிவிபரங்களானது எமது வளர்ச்சிக்கான சான்றுகளாக அமைந்துள்ளன என்று செலிங்கோ லைஃப்பின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ஆர். ரெங்கநாதன் கூறினார்.



## வர்த்தக உலகம்

ஆர்.எஸ்.கே.முருகதாஸ்

# மொபிடெல் வாடிக்கையாளர் சேவைக்கு புதிய இலக்கம்

கையடக்கத் தொலைபேசி நிறுவனமான மொபிட்டல், தனது வாடிக்கையாளர் சேவை உடனடி தொடர்பு இலக்கமாக 1717 இனை அறிமுகப் படுத்தியுள்ளது.

இவ் இலக்கம் வாரத்தின் ஏழு நாட்களும் 24 மணிநேரமும்(24/7) கிடைக்கக்கூடியதாகவும் எந்நேரமும் அணுகக் கூடியதாகவும்உள்ளது.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 109.13 | 110.73 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 176.01 | 180.01 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 154.76 | 158.93 |
| சுவிஸ் பிராங் | 136.22 | 140.72 |
| கனேடிய டொலர் | 110.89 | 114.21 |
| அவுஸ்திரேலிய டொலர் | 115.90 | 119.65 |
| சிங்கப்பூர் டொலர் | 89.99 | 92.57 |
| ஜப்பான் யென் | 1.41 | 1.45 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.40 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 29.94 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி



இலங்கையின் நிதியியல் சேவைகள் துறைக்கு மிகச்சிறந்த பங்களிப்பினை வழங்கியமையை அங்கீகரிக்கும் முகமாக, கொமர்ஷல் கிரடிட் பி.எல்.சி நிறுவனத்தின் தலைவி திருமதி வக்தெவி பெர்ணான்டோவுக்கு அண்மையில் இலங்கைப் பெண்ணின் குரல் அமைப்பினால் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

திருமதி வக்தெவி பெர்ணான்டோ கொமர்ஷல் கிரடிட் பி.எல்.சி. நிறுவனத்தின் தலைவி என்ற வகையில் தனது சூட்சுமமான வர்த்தக நிபுணத்துவத்தின் மூலம் கடந்த 23 வருடங்களாக தலைமைப் பொறுப்பினை வகித்து வரும் அதேநேரம், கம்பனியை மிகச் சிறந்த உயர் மட்டங்களுக்கு வழிநடத்திச் சென்றுள்ளார்.

# ஹீரோ விற்பனை அதிகரிப்பு

ஹீரோ மோட்டோகார்ப் நிறுவ இருசக்கர வாகன விற்பனை ஓகஸ்ட் மாதத்தில் 18.6 சதவீதம் அதிகரித்துள்ளது. ஹீரோ ஹோண்டா நிறுவனத்தில் இருந்து ஜப்பானைச் சேர்ந்த ஹோண்டா நிறுவனம் அண்மையில் விலகிய நிலையில், ஹீரோ நிறுவனம் சமீபத்தில் ஹீரோ மோட்டோகார்ப் எனப் பெயர்மாறியது. இந்நிலையில் கடந்த ஆண்டின் ஓகஸ்டில் 424,617 ஆக இருந்த மோர்ட்டார் சைக்கிள் விற்பனை கடந்த மாதம் 5 இலட்சத்து 3ஆயிரத்து 654ஆக அதிகரித்தது.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)


| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6852.96 | 6950.61 ⇧ |
| மிலங்கா விலைச்சுட்டி | 6222.08 | 6297.12 ⇧ |

விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) 19,295.29

*உயர்வடைந்த பங்குகள்(ரூ.):* எச்.ஏ.வி.பூட்ஸ்(69.30), புளூ டைமன்ஸ்(X)(3.70), புளூ டைமன்ஸ்(11.20), மல்ரி பினான்ஸ்(66.30), சிஎப்ஜ(357.10)

*சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):* ராடியண்ட் ஜெம்(80.40), மோரிஷன் (3310.00), கென்வீனியன்ஸ் பூட்(325.00), அபான்ஸ் பினான்சியல் (72.00), கூஜே(151.40).

மேலதிக தகவல்கள்: www.cse.lk




சிறிலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் பியோ ரிவி(Peo TV)யில் மஹாராஜா அலைவரிசைகளான எம்.ரிவி, சிரச, சக்தி ஆகியவற்றினை ஒளிபரப்புவதற்கான ஒப்பந்தம் கடந்த வியாழக்கிழமை கைச்சாத்திடப்பட்டது. மஹாராஜா நிறுவன குழும இயக்குநர் மனோ வீக்கிரமநாயக்க மற்றும் ரெலிகொம் பிரதம நிறைவேற்று அதிகாரி கிரேக் ஜங்கும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டபின் கைலாகு கொடுப்பதைப் படத்தில் காணலாம்.

# புகலிடக் கோரிக்கையாளர்கள் பரிமாற்றம் குறித்த நீதிமன்ற தீர்ப்பால் அவுஸ்திரேலிய அரசுக்கு நெருக்கடி

அவுஸ்திரேலிய பிரதமர் ஜூலியா கில் லார்ட்டின் தலைமைத்துவம் தொடர்பில் அவரது ஆளும் தொழிற் கட்சியில் குழப்ப நிலை தோன்றியுள்ளதாக தகவல் வெளியா கியுள்ள நிலையில் தனக்கு பதவி விலகும் நோக்கம் கிடையாது என கில்லார்ட் தெரி வித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்குப் புகலிடம் கோரி வந்தவர்களை மலேசியாவுக்கு அனுப்பும் அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் திட்டம் சட்ட விரோதமானது என உச்சநீதிமன்றம் இந்த வாரம் தீர்ப்பளித்துள்ளமையானது பிரதமர் ஜூலியா கில்லார்ட்டிற்கு பாரிய அடியாக அமைந்துள்ளது.

இந்நிலையில் ஜூலியா கில்லார்ட்டின் பதவி நிலைக்கு நியமிக்கக்கூடியவர்களும் முன்னாள் பிரதமர் கெவின் ரூட் உள்ளடங் கலான பலரின் பெயர்கள் குறிப்பிடப்படு கின்றன. கெவின் ட் பொதுத் தேர்தலையொட்டி கடந்த வருடம் ஜூன் மாதம் பதவி விலகினார்.

கருத்து கணிப்பு வாக்கெடுப்புகளில் ஜூலியா கில்லார்ட்டின் மக்கள் அங்கீகாரம் கெவின்ரூட் பதவி விலக நிர்பந்தத்துக்குள் ளாகிய போது இருந்ததை விட வீழ்ச்சி கண் டுள்ளது. இதனால் ஜூலியா கில்லார்ட் நேற்று முன்தினம் தனது மக்கள் செல்வாக்கை கட்டியெழுப்பும் வகையில் பல தடவைகள் தொலைக்காட்சியில் தோன்றினார்.

நான் செய்ய வேண்டியவை நிறைய உள்ளன என்று கூறிய ஜூலியா கில்லார்ட் நான் இந்தப் பதவிக்கு சேவையாற்ற மிகச் சிறந்த நபராக உள்ளேன். நான் எனது பணியை தொடர்ந்து மேற்கொள்ளவுள்ளேன்.

சிறந்த எதிர்காலத்தை நோக்கி இந்த தேச த்தை இட்டுச் செல்வதே எனது பணியாகவும் எனக்கு எதிர்காலம் தொடர்பான தெளிவர்ன நோக்குள்ளதாகவும் நாங்கள் முக்கிய கொள் கைகளை நடைமுறைப்படுத்தி வருகிறோம் என்றும் தெரிவித்தார்.

ஆளுங்கட்சியை சேர்ந்த எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரும் தன்னை அணுகி தான் பதவி விலகுவ்து தொடர்பில் கேட்டுக் கொள்ளவில்லை என ஜூலியா கில் லார்ட் வலியுறுத்தியுள்ளார்.

ஜூலியா கில்லார்ட்டின் ஆட்சி அதிகார மானது கிறீன் கட்சி பாராளுமன்ற உறுப்பி னர் ஒருவரது 3 சுயேட்சை பாராளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவில் தங்கியுள் ளமை குறிப்பிடத்தக்கது.

(ஶ்ரீ-2)

# அன்னா ஹசாரேக்கு இசட் பிரிவு பாதுகாப்பு

அன்னாஹசாரேக்கு இசட் பிரிவு பாது காப்பை மத்திய அரசு வழங்கியுள்ளது.

ஜனலோக்பால் மசோதாவுக்காக போரா ட்டம் நடத்தியதால் அன்னாஹசாரே செல் வாக்கு அதிகரித்துள்ளது. மக்களிடம் பிரபல மான அன்னாஹசாரே மீது தாக்குதல் நடத் தப்படலாம் என உளவுத்துறை எச்சரிக்கை செய்துள்ளது.

இதையடுத்து அன்னாஹசாரேக்கு இசட் பிரிவு பாதுகாப்பை மத்திய அரசு வழங் கியுள்ளது. ராலோகான் சிற்றியில் உள்ள அன்ன்ாஹசாரேவின் வீட்டிற்கும் பாதுகாப்பு அதிகரித்துள்ளது.

(ஶ்ரீ-2)

# ரொமேஷ் சானக்கவின் மரணம் தொடர்பில் உண்மை வெளிப்படுத்தப்பட வேண்டும்

## கத்தோலிக்க ஆயர்களின் சம்மேளனம் வலியுறுத்து

(கொழும்பு)

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய ஊழியர்களின் எதிர்ப்பு நடவடிக்கையின் போது உயிரிழந்த ரொமேஷ் சானக்கவின் மரணத்திற்கான காரணத்தை நேர்மையா கவும் நியாயமாகவும் ஆராய்ந்து உண்மை யை சுட்டிக்காட்டுமாறு இலங்கை கத்தோ லிக்க ஆயர்களின் சம்மேளனம் அரசாங்கத் திடம் வேண்டுகோள் விடுத்தது.

சானக்கவின் குடும்பத்தினர் இந்த மர ணம் தொடர்பில் அறிந்து கொள்வதில் ஆர் வத்துடன் இருப்பதாக சம்மேளனத்தின் தலைவர் வணக்கத்திற்குரிய மெல்கம் ரஞ் சித் ஆண்டகை மற்றும் பொதுச் செயலாளர் வணக்கத்திற்குரிய நோபட் எம் அன்த்ராதி ஆகியோரினால் வெளியிடப்பட்டுள்ள அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 25 ஆம் திகதி இடம்பெற்ற இலங்கை கத்தோலிக்க ஆயர்களின் சம் மேளனத்தின் கூட்டத்தொடரில் ரொமேஷ் சானக்கவின் மரணம் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டதாக தெரிவிக்கப் படுகிறது.

(ஶ்ரீ-2)

# பொலிஸ் அறிக்கைகள் தொடர்பான தகவல்கள் எஸ்.எம்.எஸ் மூலம்

மக்கள் தாம் விண்ணப்பித்துள்ள பொலிஸ் அறிக்கைகள் தொடர்பிலான தகவல்களை இலகுவாக அறிந்து கொள்வதற்கான புதிய திட்ட மொன்றை பொலிஸ் தலைமையகம் செயற் படுத்தியுள்ளது.

இதுவரை காலமும் கொழும்புக்கு வருகை தந்தே பொலிஸ் அறிக்கைகள் தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்ள வேண்டியி ருப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரி ஷாந்த ஜயக்கொடி தெரிவிக்கின்றார்.

புதிய திட்டத்திற்கு அமைய குறுந்தகவல் ஒன்றை அனுப்பிவைப்பதன்மூலம் மக்கள் தமக்கு தேவையான பொலிஸ் அறிக்கை தொடர்பான அனைத்து விபரங்களையும் அறிந்து கொள்ள முடியுமெனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதற்கமைய பி.எல்.சி இடைவெளி சி. ஆர்.சி என டைப் செய்து இடைவெளிவிட்டு தாம் கோரியுள்ள பொலிஸ் அறிக்கை இலக் கத்தை குறிப்பிட்டு 1919 என்ற இலக்கத்திற்கு அனுப்பி வைப்பதன்மூலம் உடனடியாக அது தொடர்பிலான தகவல்களை அறிந்து கொள்ள முடியும் என பொலிஸ் ஊடகப் பேச் சாளர் மேலும் குறிப்பிடுகிறார். (ஶ்ரீ-2)

# ஆட்டோ குடைசாய்ந்ததில் ஒருவர் பலி; மற்றவர் காயம்

(கொழும்பு)

திருகோணமலையில் சீனக்குடா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியள வில் ஆட்டோ குடை சாய்ந்ததில் ஒருவர் பலி யானதுடன் மற்று மொருவர் காயப்பட்ட நிலையில் திருமலை பொது வைத்தியசாலையில் விபத்துச் சேவை ப்பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாக பொலி ஸார் தெரிவித் தனர்.

சீனக்குடாவைச் சேர்ந்த சதீஸ் சுரங்க (வயது-28), என்பவரே இவ்வாறு உயிரிழந் தவராவர். சக நண்பர் களுடன் மது அருந்தி விட்டு வீட்டுக்கு செல் லும் வேளை யில் கொங் கிரீட் வீதியில் ஆட்டோ குடைசாய் துள்ளது.

அத்துடன் மதுபோதையில் ஆட்டோ ஓட் டிச்சென்ற அழுத்கெதர சமன்(வயது-34). என்பவரே தலையில் காயமேற்பட்ட நிலை யில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

உயிரிழந்தவரின் சடலம் திருகோண மலை பொது வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை சீனக்குடா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஶ்ரீ-2)

# சந்திரிக்காவை ஐ.தே.க தலைமைப்பதவியில் அமர்த்த மங்கள சமரவீர சதித்திட்டம்

## பிரதிப் போக்குவரத்து அமைச்சர் தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண் டார நாயக்காவை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியில் அமர்த்த சதித் திட்ட மொன்று முன்னெடுக்கப்பட்டு வருவதாக பிரதிப் போக்குவரத்து அமைச்சர் நிர்மல் கொத்தலாவல தெரிவித்துள்ளார்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினருமான மங்கள சமரவீரவினால் இந்த சதித்திட்டம் மேற்கொள்ளப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் சந்திரிக் காவை ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பா ளராக போட்டியிடச் செய்வதற்கான முயற் சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரி வித்துள்ளார். மங்கள சமரவீர தனது அரசி யல் இலாபத்திற்காக இந்த சதித்திட்டத்தை மேற்கொள்வதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவையும் மங்கள சமரவீர இவ் வாறு பயன்படுத்தி கொண்டதாகக் குறிப்பிட் டுள்ளார்.

ஶ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் 60 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப் பிட்டுள்ளார்.

(ஶ்ரீ-2)

# கண்ணீர் அஞ்சலி



## திருமதி ஆறுமுகம் சிவபாக்கியம்

ஈடு செய்ய முடியாத இப்பேரிழப்பால் ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கும் அன்னாரின் குடும்பத்தையும், உறவினர் களையும் ஆண்டவர் தேற்றுவிப்பாராக.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைந்து சிதம்பரேஸ்வரரின் திருக்கமல பாதத்தை சேர்வதாக

E.S.P நாகரட்ணம் அவர்களின் மாமியாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

உரிமையாளர்:
தேனு களஞ்சியம்,
இல.29, நவீனசந்தை, திருநெல்வேலி.

(6052)

# விடுதலைப்புலிச் சந்தேகநபர்களை தடுத்துவைத்து விசாரணை செய்ய சட்டரீதியான அதிகாரம் கிடையாது

## த.தே.கூ,ஜே.வி.பி.குற்றச்சாட்டு

தமிழீழ விடுதலைப் புலிச் சந்தேகநபர்களை தடுத்து வைத்து விசாரணை செய்வதற்கு சட்ட ரீதியான அதிகாரம் கிடையாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஜே.வி.பி யும் குற்றம் சுமத்தியுள்ளன.

அவசரகாலச் சட்ட நீக்கப்படுவதாக அரசாங்கம் விடுத்த அறிவிப்பைத் தொடர்ந்து இந்த சட்டசிக்கல் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவசரகாலச் சட்டத்திற்கு பதிலாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள புதிய சரத்துக்கள் குறித்து இதுவரையில் வர்த்தமானி அறிவிப்பு எதுவும் விடுக்கப் படவில்லை என குறித்த இரண்டு கட்சிகளும் சுட்டிக்காட்டியுள்ளன.

வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்படும் வரையில் குறித்த சரத்துக்களுக்கு சட்ட ரீதியான அங்கீகாரம் கிடையாது எனவும் இந்தப் பின்னணியில் புலிச் சந்தேகநபர்களை எவ்வாறு தடுத்து வைத்திருக்க முடியும் எனவும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழீழ விடுதலைப் புலிச் சந்தேகநபர்களை தடுத்து வைக்கப்பட்டுள்ளமை மற்றும் உயர்பாதுகாப்பு வலய அறிவிப்பு ஆகியன சட்ட விரோதமானவை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 30 ஆம் திகதி அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டதனைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உள்ளிட்ட ஆதரவு அமைப்புகளை தடை செய்தல் மற்றும் புலிச் சந்தேக நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் ஆகியன தொடர்பில் புதிய சட்டம் அறிமுகப்படுத்தப்படும் என அரசாங்கம் அறிவித்திருந்தது.

எனினும் நேற்று முன்தினம் வரையில் வர்த்தமானி அறிவிப்புக்கள் எதுவும் விடுக்கப்படவில்லை எனவும் இதனால் புலிச் சந்தேக நபர்களை கைது செய்தல் சட்ட விரோதமானது எனவும் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விஜித் ஹேரத் தெரிவித்துள்ளார்.

புலிச் சந்தேகநபர்களை தடுத்து வைத்திருத்தல் மற்றும் உயர் பாதுகாப்பு வலயங்களை அமுல்படுத்தல் ஆகியன சட்டத்திற்கு புறம்பானது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம்.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

ஏனெனில் கடந்த சில தினங்களாக புலிச் சந்தேக நபர்களை தடுத்து வைப்பதற்கான சட்ட ஒழுங்குகள் செய்யப்பட்டவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். 5ஆயிரத்திற்கும் மேற்பட்ட புலிச் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் சம்பூர் போன்ற உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு பொதுமக்களினால் பிரவேசிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

சட்டதிருத்தம் தொடர்பில் ஏதேனும் வர்த்தமானி அறிவிப்புக்கள் வெளியிடப்பட்டுள்ளனவா என்பது தொடர்பில் அரசாங்கம் அச்சுத் திணைக்களத்திடம் கோரியதாக சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் புதிய சட்டத்திருத்தங்கள் தொடர்பான வர்த்தமானி அறிவிப்புக்கள் எதுவும் அச்சிடப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். புலிச் சந்தேகநபர்களை தடுத்து வைத்தல் மற்றும் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டால் அதற்கு எதிராக சட்டநடவடிக்கை எடுப்பது குறித்து கவனம் செலுத்தப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முதலில் இந்த சரத்துக்கள் குறித்து ஆய்வு செய்ய வேண்டுமென அவர் குறிப் பிட்டுள்ளார். அதன் பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து தீர்மானிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். அவசரகாலச் சட்டம் அகற்றப்பட்டுள்ள நிலையில் வேறு ஒரு சட்டத்தின் கீழ் அவசரகாலச்சட்டத்தை அமுல்படுத்த அரசாங்கம் முயற்சிக்கக் கூடாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை வர்த்தகமானி அறிவித்தல் பிரசுரமாவதற்கு தாமதம் ஏற்பட்டிருக்கலாம் எனவும் இதனால் சட்ட அமுலாக்கத்திற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது எனவும் முன்னாள் சட்ட மா அதிபர் மொஹான் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

(ஶ்ரீ-2)

# காணாமல்போன 2 இலங்கையர்கள் தொடர்பில் எதுவித தகவலுமில்லை

(கொழும்பு)

இந்தியாவுக்கான யாத்திரை மேற்கொண்டிருந்த போது தலைநகர் புதுடில்லியில் வைத்து காணாமற்போன இரண்டு இலங்கையர் தொடர்பில் இதுவரை எவ்வித தகவலும் இல்லையென இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராலயம் தெரிவிக்கிறது.

காணாமற்போன இருவரையும் கண்டு பிடிப்பதற்காக இரண்டு குழுக்கள் தேடுதல் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளதாக இந்தியாவுக்கான இலங்கை பிரதி உயர்ஸ் தானிகர் பாலித்த கனேகொட தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கான யாத்திரை மேற்கொண்டிருந்த இலங்கையர் மூவர் கடந்த 29 ஆம் திகதி காணாமற் போயிருந்தனர். இவர்களில் ஒருவர் கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ஶ்ரீ-4)

# ஜெனீவா மாநாட்டில் சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் பொறுப்புடன் பதிலளிக்க வேண்டும்

## அரசுக்கு ஐ.தே.க அறிவுரை

(கொழும்பு)

ஜெனீவா மாநாட்டில் இலங்கை தனிமைப்படுத்தப்படுமாயின் எதிர்காலத்தில் பெரும் ஆபத்துக்களை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று ஐக்கி தேசியக் கட்சி எச்சரித்துள்ளது.

இலங்கைக்கு எதிரான ஐ.நா.நிபுணர் குழுவின் அறிக்கை மற்றும் சனல் 4 வீடியோக் காட்சிகள் என்பன நாட்டிற்கு எதிரான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களுக்கு வலுசேர்த்து விடும். எனவே அரசாங்கம் தமது பிரதிநிதிகளை தயார் நிலையில் அனுப்பி வைக்க வேண்டும் என்றும் அக்கட்சி குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி கருத்து தெரிவிக்கையில் ,

ஜெனீவாவில் எதிர்வரும் 12 ஆம் திகதி ஐ.நா. மனித உரிமை பேரவையின் மாநாடு நடைபெறவுள்ளது. இதில் இலங்கை விவகாரங்கள் முக்கிய இடம்பிடிக்கும் என்று உள்நாட்டில் மாத்திரமல்லாது சர்வதேச அளவிலும் பேசப்படுகின்றது.

எவ்வாறாயினும் கடந்த சில காலங்களாகவே இலங்கைக்கு எதிராக மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களை சர்வதேசம் சுமத்தி வருகின்றது. இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஆக்கபூர்வமாக அரசாங்கம் செயற்படவில்லை. இராஜதந்திர ரீதியில் உரிய முறையில் அணுகவும் இல்லை.

குறிப்பாக ஐக்கிய நாடுகள் சபை நிபுணர் குழுவின் அறிக்கையில் இடம்பெற்றுள்ள இலங்கைக்கு எதிரான மனித உரிமை மீறல் மற்றும் போர்க்குற்றச்சாட்டுக்கள் பாரதூரமானவையாகும்.

இதற்கு மேலும் வலுச்சேர்க்கும் வகையிலே சனல் 4 தொலைக்காட்சி வீடியோக்களையும் வெளியிட்டது. இந்த வீடியோ காட்சியானது மேற்குலக நாடுகளில் மாத்திரமல்லாது இந்தியா உள்ளிட்ட ஏனைய நாடுகளிலும் ஒளிபரப்பப்பட்டது.

எனவே சனல் 4 வீடியோவில் காணப்படும் போர்க் குற்றச்சாட்டுக்களும் சாட்சியங்களும் நாட்டிற்கு அபகீர்த்தியையே ஏற்படுத்தியுள்ளன. இவ்வாறான பாரியளவிலான விமர்சனப் பார்வையை இன்று இலங்கை மீது சர்வதேச நாடுகள் கொண்டுள்ளன.

ஆகவே தான் ஜெனீவா மனித உரிமை பேரவை மாநாட்டில் இலங்கை விடயம் சூடு பிடிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எவ்வாறாயினும் இலங்கையர் என்ற வகையில் நாட்டை பாதுகாக்க வேண்டியது நம் அனைவரதும் கடமையாகும். மாநாட்டில் இலங்கைக்கு எதிராக சுமத்தப்படுகின்ற குற்றச்சாட்டுக்களுக்கு பொறுப்புடன் பதில் கூறப்படவேண்டும். அரசாங்கம் முரண்பட்டு பிரச்சினைகளை வளர்த்துக் கொள்ளக் கூடாது என்றார்.

(ஶ்ரீ-2)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு வேப்பந்திடல் அருள்மிகு ஶ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய பரிபாலன சபையின் விசேட பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

இதன் தலைவர் ச.வந்தரூபன் தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்திற்கு பொதுச்சபையின் உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு செயலாளர் அ.ஶ்ரீபத்மராசா அறிவித்துள்ளார்.

(ஶ்ரீ-4)



பளை பிரதேசத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு இராணுவத்தினரால் வாழ்வாதார உதவிகள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டது. இதில் அப்பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் வறுமைக் கோட்டின் கீழ் கல்வி கற்கும் மாணவர்களுக்கு யாழ். மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க பாடசாலை கற்றல் உபகரணங்களை வழங்குவதையும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு பசுமாடுகளை யாழ். மாவட்ட சிரேஷ்ட பிரிகேடியர் பிராங்கிலின் ரொற்றிக்கோ வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.(படங்கள்: அலுவலகச் செய்தியாளர்)

அஞ்சியவர்க்கு சத மரணம். அஞ்சாத நெஞ்சத்து ஆடவர்க்கு ஒரு மரணம்.

- யூலிஸ் சீசர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## எமதருமைத் தமிழ்ப் புத்திஜீவிகளே! பயம் என்ற போர்வையை தூக்கி வீசுங்கள்

குடாநாட்டில் தொடரும் பதற்றமான நிலைமையால் மக்களின் நாளாந்த இயல்பு வாழ்க்கை மிக மோசமாகப் பாதிப்படைந்து வருகின்றது.

இத்தகைய நிலைமை கட்டுக்கடங்காமல் செல்வதன் காரணமாக சிறுவர்கள் மற்றும் பெண்களின் மனநிலை பாதிப்படையக்கூடிய பாதகமான நிலைமையும் ஏற்படலாம்.

எனினும் இது தொடர்பில், ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் எவரும் ஈடுபடுவதாகத் தெரியவில்லை.

சுருங்கக்கூறின் தமிழ் மக்கள் அரசியல் தலைமையற்றவர்களாக வெறுமை நிலையில் வாழ்கின்றார்கள் என்பது நிரூபணமாகிவிட்டது.

எனவே இத்தகையதோர் நாதியற்ற நிலையில் தமிழ்ப் புத்திஜீவிகள் ஒன்றுகூடி யாழ்ப்பாணம் உள்ளிட்ட தமிழர் பகுதிகளில் ஏற்பட்டுள்ள பதற்றமான நிலைமையைத் தணிக்கக்கூடிய ஏற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும்.

அரசியல், சமயம் என்பனவற்றுக்கப்பால் பொதுமக்களிடையே ஏற்பட்டுள்ள பதற்ற நிலைமையை தணிப்பதற்காக புத்திஜீவிகள் ஒன்று சேர்ந்து ஆராய்வது மிகவும் அவசியமானதாகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புத்திஜீவிகள், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள் உள்ளிட்டோர் இதுவிடயத்தில் கூடிய கவனம் செலுத்துவது கட்டாயமானதாகும்.

தமிழ் மக்களின் இன்றைய அவலமான நிலைமைக்கு தனித்து அரசியல் காரணிகள் மட்டும் காரணமல்ல. மாறாக தமிழ்ப் புத்திஜீவிகள் 'பயம்' என்ற போர்வையால் தங்களை இறுகப் போர்த்திக் கொண்டு அநீதி, அட்டூழியம் என எதையும் தட்டிக் கேட்காமல் மௌனமாக இருந்தமையும் தமிழ் மக்கள் இத்துனை துன்பங்களையும் அனுபவிப்பதற்கு காரணம் என்பதைக் கூறித்தான் ஆக வேண்டும்.

புத்திஜீவிகள் பயப்படுவார்களாயின் அதை விடக் கொடுமை எதுவுமாக இருக்க முடியாது.

'பயம்' நியாயமானதாக இருக்கலாம். அதற்காக அந்தப் பயமே எங்கள் வாழ்வுக்கு மாரகமாக அமையுமாயின் அந்தப் பயத்தை துறந்து துணிந்து களமிறங்குவது தமிழினத்தை வாழவைக்குமல்லவா?

எனவே அன்புக்குரிய தமிழ்ப் புத்திஜீவிகளே! மர்ம மனிதன் என்ற பெயரால் அப்பாவித் தமிழ் மக்கள் படும் அவலத்தை ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள்.

போரின் கொடூரத்தால் கணவனை, பெற்றோரை இழந்த குடும்பங்கள் ஏராளம். இந்தக் குடும்பங்கள் ஆண்துணை இன்றி வாழும் நிலையில் மர்ம மனிதன் என்ற பிரச்சினை அவர்களை எத்துணை தூரம் பயப்பீதிக்கு ஆளாக்கும் என்ற யதார்த்தத்தை உணர்ந்து கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் எதையும் செய்யலாம் என்று எவரும் நினைக்காத வகையில் ஒன்றுகூடி உரத்துக் குரல் கொடுங்கள்.

எங்கள் வழக்கறிஞர்களே! சட்டத்தைப் பயன்படுத்தி மன்றேறி நீதி கோருங்கள். நீங்கள் நினைத்தால் உலகமே தூங்கும் போது விழித்திருக்கும் ஈழத்தமிழினத்திற்கு தாராளமாக உதவ முடியும்.

உங்கள் உதவிக்கான களம் இதுதான். சமராடுங்கள்; சரித்திரம் படைப்பீர்கள். இவை வீறாப்பு வசனங்கள் அல்ல. வெந்தணலில் புதையுண்டு எழுந்த எங்களைக் கருவருக்க நினைக்கும் கொடூரப் பிடியில் நின்று விடும் இரக்கமான கோரிக்கை. இதை நிராகரித்து விடாதீர்கள்.

# நாளை முதல் ஒருவார காலத்திற்கு டெங்கு கட்டுப்பாட்டு வாரம் பிரகடனம்

யாழ்.மாவட்டத்தில் தற்போது டெங்கு நோய் தீவிரமாகப் பரவிவருகிறது. ஓகஸ்ட் மாதத்தில் டெங்கு நோயினால் இரண்டு இறப்புகள் ஏற்பட்டுள்ளன. எனவே டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தும் நோக்குடன் வடமாகாண ஆளுநர், வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், வடமாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஆகியோரின் பணிப்பு ரைக்கமைய யாழ்.மாவட்டத்தில் நாளை திங்கட்கிழமை முதல் ஒரு வாரகாலம் டெங்கு கட்டுப்பாட்டு வாரமாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளதாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மாவட்ட மட்டத்தில் ஒருங்கிணைக்கும் நோக்குடன் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் ஓர் செயற்பாட்டு குழு அமைக்கப்பட்டுள்ளது என்றும் இதேபோன்று ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையிலும் ஓர் குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பட்டுள்ளார்.

பின்வரும் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் இவ்வாரத்தில் மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் அறிவித்துள்ளார்.

✸ ஒவ்வொரு அரச ,தனியார் வைத்தியசாலைகளில் சிகிச்சையளிக்கப்படும் காய்ச்சல் அறிகுறியுடன் காணப்படும் நோயாளர் விபரங்கள் நாளாந்த அடிப்படையில் கண்காணிக்கப்படும்.

✸ பொதுமக்களுக்கு டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் பற்றி பல்வேறு ஊடகங்கள் ஊடாகவும் பொது அறிவித்தல் மூலமும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

✸ நோயாளர்கள் இனம்காணப்பட்ட இடங்களிலும் பொதுமக்கள் அதிகமாக ஒன்று கூடும் இடங்களிலும் டெங்கு நோயாளர்கள் சிகிச்சையளிக்கப்படும் வைத்தியசாலைகளிலும் புகையூட்டல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். புகையூட்டல் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி விஸ்தரிக்க வடமாகாணத்தில் ஏனைய மாவட்ட சுகாதார திணைக்களங்களிலிருந்து உடனடியாக உபகரணங்களும் ஆளணியினரும் யாழ். மாவட்டத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

✸ தண்ணீர் தேங்கி நிற்கும் வடிகால்களிலும் ஏனைய இடங்களிலும் BTI பக்ரீறியா விசிற நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

அத்துடன் பின்வரும் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு டெங்கு நோயை கட்டுப்படுத்த ஒத்துழைப்பு வழங்குமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

✸ அரச, தனியார் நிறுவனங்கள் வர்த்தக நிலையங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் உடனடியாக தத்தமது நிலையங்களை நுளம்பு பெருகும் இடங்கள் இல்லாது துப்புரவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

✸ சகல பாடசாலைகளும் மூன்றாம் தவணைக்காக எதிர்வரும் 5 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து முதல் மூன்று நாட்களுக்குள் சிரமதான அடிப்படையில் துப்புரவு செய்யப்பட வேண்டும்.

✸ சகல வீடு, வளவுகளும் குடியிருப்பாளர்களால் அல்லது உரிமையாளர்களால் உடனடியாக துப்புரவு செய்யப்பட வேண்டும்.

✸ பராமரிப்பின்றியுள்ள காணிகள், வீடுகள் உரிமையாளர்களால் அல்லது பராமரிப்பாளர்களால் உடனடியாக துப்புரவு செய்யப்பட வேண்டும். செய்யத் தவறுபவர்களுக்கெதிராக சில உள்ளூராட்சி மன்றங்கள் பொருத்தமான நடவடிக்கைகளை ஏற்கனவே முன்னெடுத்துள்ளன. ஏனைய உள்ளூராட்சி மன்றங்களும் அந்த முன்னுதாரணங்களை பின்பற்ற வேண்டும்.

✸ பொது இடங்களிலும் வீதிகளிலும் உள்ள குப்பைகளை உடனடியாக அகற்ற உள்ளூராட்சி மன்றங்கள் விசேட செயற்றிட்டமொன்றை முன்னெடுக்க வேண்டும். பணியாளர்கள், டிராக்டர்கள் போதியளவு இல்லாவிடில் வாடகைக்கு பெற்றுக் கொள்ள நடவடிக்கையெடுக்க வேண்டும்.

✸ கழிவு நீர் வாய்க்கால்கள் யாவும் கிரமமான முறையில் துப்புரவு செய்யப்பட வேண்டும்.

✸ தற்போது யாழ்.மாவட்டத்தின் பல ஆலயங்களில் மஹோற்சவங்கள் நடைபெற்று வருகின்றன. ஆலய அறங்காவலர் சபையினரும், அப்பிரதேசத்திற்குரிய உள்ளூராட்சி சபையும் ஆலய சூழலை துப்புரவாக பேணுவதை உறுதி செய்ய வேண்டும்.

✸ அரசசார்பற்ற நிறுவனங்கள் தம்மிடமுள்ள தொண்டர்களை டெங்கு விழிப்புணர்வு பணிக்கு ஈடுபடுத்தி ஒத்துழைப்பு வழங்க முன்வரவேண்டும்.

✸ டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் பிரதேச செயலாளரால் வாராந்த அடிப்படையில் ஒருங்கிணைக்கப்பட்டு கண்காணிக்கப்பட வேண்டும்.

✸ கிராமமட்ட டெங்கு கட்டுப்பாட்டுக் குழுக்கள் மீள ஆரம்பிக்கப்பட்டு கிராமமட்டத்தில் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க வேண்டும். (ஸ்ரீ-2)

# முதுகுக்குபின் பேசுவதை தவிர்ப்போம் முகம் பார்த்து பேசுவோம் (மத்18:15-20)

இன்றைய இறைவார்த்தைகள் சவாலான ஒருசெயலைத் தருகின்றன. பாதகத்தை சரிசெய்து உறவை மீண்டும் புதுப்பிக்க எம்மை அழைக்கின்றன. ஒருவரைப்பற்றி அவர் சென்றபின் அவதூறாகப் பேசுவது இன்று கலாசாரமாகவுள்ளது. இது சமூகத்தினரிடையே பெரும் பாதகத்தை உருவாக்குகின்றது. இந்தப் பாதகம் குடும்பத்தை, குழுமத்தை, சமூகத்தை, பங்குத்தளத்தை முன்னேற்றமில்லாத் தேக்க நிலைக்கு உள்ளாக்குகின்றது.

நேராக சம்பந்தப்பட்டவர்களிடம் சொல்வது பலருக்கு கடினமாக காணப்படுகின்றது.

## பரமபிதா காட்டிய பாதை

இன்றைய வாசகங்கள் முதுகுக்குபின் பேசாமல் சம்பந்தப்பட்ட நபரிடம் முகம் பார்த்து நேராக பேசுவது எம் கடமை என்கின்றன. முதல் வாசகத்தில் எசேக்கியலைப் பார்த்து இறைவன் நீ மக்களிடம் போய் நேராக, தைரியமாக அவர்கள் வாழ்க்கையை மாற்றச் சொல். இல்லையென்றால் அழிவை சந்திக்கநேரிடும் எனக் கூறச் சொல்கிறார்.

இயேசு வழங்கிய அன்புக் கட்டளைக்கு இரு பக்கங்கள் உண்டு. நாம் கடவுளை அன்பு செய்வது. அடுத்தது நாம் பிறர் மீது அன்புகாட்டுவது. இந்த இரு பக்கங்களும் ஒரே அன்புக் கட்டளையின் இணைபிரியா அம்சங்கள் என காட்டிய அன்பை அனைவரோடும் பகிரவேண்டும் என்கிறது இரண்டாம் வாசகம்.

நற்செய்தியில் உறவின் விரிசல், சமூகத்தின் , குழுமத்தின், பங்குத்தளத்தின் விரிசல், ஒன்றிப்பின்மையை உருவாக்குகிறது. எங்கு ஒன்றிப்பில்லையோ அங்கு நானில்லை என்றார் இயேசு. பாதகத்தை சரிசெய்து என்பிரசன்னத்தை பெற்றுக் கொள்ள முடியும் என்றார். ஒன்றித்திருக்க மூன்று படிகளைக் இயேசு கற்பிக்கின்றார்.

அதில்முதலாவது, முழுமனதோடு, முழுவிருப்பத்தோடு நாம் சந்தித்து முயற்சிகள் எடுக்க வேண்டும். தவறை சுட்டிக் காட்ட அல்ல மாறாக நன்மைத்தனத்தினால் மீண்டும் உறவைநோக்கி அனைவரும் வர நாம் புதிய சமுதாயத்தை உருவாக்க ஆரம்பிக்க வேண்டும்.

இரண்டாவது, முக்கியமானவர்களோடு ஆசிரியர்கள், ஆற்றுப்படுத்துநர், ஆர்வமுள்ளவர்கள் உதவியோடு அணுகுதல் பாதகத்தைச் சொல்லி கண்டிக்க அல்ல.மாறாக ஆக்கபூர்வ மான பாதையை காட்ட நாம் முயற்சிகள் ஆரம்பிக்க வேண்டும்.

மூன்றாவது, திருச்சபையில் முதன்மையானவர்களாகிய அருள் தந்தையர்கள், துறவிகள் பொறுப்பில் இருக்கும் ஆன்மீக வழிகாட்டிகளோடு அணுகுதல் இங்கு இறை ஆசிரை. இறைவன் தரும் வாய்ப்பை உயர்ந்து உடன் பயணம் செய்வதாகும்.

இந்த மூன்று படிகளிலும் ஒருவர் மாறாவிட்டால் அவர்கள் சமூகத்திலிருந்து தனித்துவிடப்பட்ட வரிசூலிப்பவர்-சதுசேயர் போல இருக்கட்டும் என்கிறார் இயேசு.

நாம் ஒன்றித்து வளர நேர்முகமாகச் சந்தித்து பாதகத்தை சரிசெய்கின்ற முதற்படியான முழுமனதோடு முதல் முயற்சி எடுப்பதை சிந்திப்போம். சகோதரத்துவம் உணரப்பட, எதிர்ப்பாக நினைக்காமல், குறையை சுட்டிக்காட்டாமல் தவறை மீண்டும் அலசாமல், பாதகம் செய்தவர்களாக பார்க்காமல் சகோதரமாக நோக்கும் பொழுது அவர்களும் மீண்டும் சமூகத்தோடு இணைவதின் நன்மையை உணர்ந்து தவறை ஏற்றுக் கொண்டு ஒன்றிணைவார்கள்.

சக்கேயுவைப் பார்த்து உன்வீட்டில் நான் தங்கவேண்டும் என்ற இயேசு அவனை நேராகப் பார்த்து இன்று இவர் வீட்டிற்கு மீட்புகிடைத்தது. இவரும் சமூ கத்தோடு ஒன்றிணைந்தார் என்கின்றார்.



இயேசு குனிந்து நிமிர்ந்து விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணைப் பார்த்து யாரும் தீர்ப்பிடவில்லையா. மீண்டும் சமூகத்தோடு இணைந்து கொள் இனிப் பாவம் செய்யாதே என்றார். இயேசு தம்மை பின்பற்ற விரும்பிய செல்வரைப் அன் பொழுக கூர்ந்து நோக்கி உமக்கு இன்னும் ஒன்று குறைபடுகிறது. நீர்போய் உமக்கு உள்ளவற்றை விற்று ஏழைகளுக்கு கொடும் என்றார். மேற்கூறிய நிகழ்வுகளில் இயேசு முகம்முகமாக பார்க்கின்றார். அன்போடு நோக்குகின்றார். சவாலோடு நன்மைத் தனத்தை உணர்த்துகின்றார். சகோதரமாக மீண்டும் கிறிஸ்தவ சமூகத்தோடு இணைய வரவேற்கின்றார்.

ஆகவே, மனிதரின் முதுகுக்குபின் பேசுவதை தவிர்ப்போம். அது கிறுஸ்தவ ஒன்றிப்பு அல்ல. முகம்பார்த்து பேசுவோம். சகோதரத்துவம் வளரும், மனிதம் உயரும், அதுவே கிறிஸ்தவ ஒன்றிப்பு, அங்கே இயேசு இருக்கின்றார். எம்மிடையே என்றும் இயேசுவை இருக்க செய்வோம்.

ம. பிரான்சிஸ்க்,
கத்தோலிக்க சுதந்திர,
பத்திரிகையாளர்.

# பிரமிட் கட்டமைப்புக்களைப் போன்ற தடை செய்யப்பட்ட திட்டங்கள்

# உங்களை அழிவடையச் செய்யும்

## "தடைசெய்யப்பட்ட திட்டம்" என்பது யாது ?

- தடைசெய்யப்பட்ட திட்டம் என்பது அதில் பங்குபற்றுபவர்கள் பணத்தினை அல்லது பணப் பெறுமதியினைச் செலுத்துவதற்கு அல்லது பங்களிப்புச் செய்வதற்கு வேண்டிக்கொள்ளப் படுவதுடன் அதில் பெறப்படும் நன்மைகள், 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் 83C பிரிவில் குறிப்பிட்டுள்ளபடி
  1. திட்டத்தில் பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லுதல், அல்லது
  2. பங்குபற்றுபவர்களினால் மேற்கொள்ளப்படும் பங்களிப்புக்கள் அதிகரித்துச் செல்லுதல் என்பவற்றில் பெருமளவில் தங்கியிருக்கும் ஓர் கட்டமைப்பாகும்.
- இதன் அடிப்படையில் திட்டத்தில் புதிய பங்குபற்றுபவர்கள் இணைந்து கொள்வதற்கு முற்பணமாக ஓர் கட்டணத்தைச் செலுத்துமாறு வேண்டப்படுகின்றனர். மேலதிக பங்குபற்றுபவர்களின் மூலமாகவும் அதேநேரம் தற்போதுள்ள பங்குபற்றுபவர்களினால் கொண்டு வரப்படும் புதிய பங்குபற்றுபவர்கள் மூலமாகவும் தான் இலாபங்கள் (பணம் அல்லது ஏனைய சலுகைகள்) கிடைக்கும் என பங்குபற்றுபவர்களுக்கு பின்னர் உறுதியளிக்கப்படுகின்றது. எனினும், இத்திட்டங்களானது பெருமளவில் பொருட்கள் அல்லது சேவைகளினை விற்பனை செய்யும் திட்டங்களாக' போலியான முறையில் காணப்படுகின்றன.

## தடைசெய்யப்பட்ட திட்டங்களை வேறுபடுத்திக் காண்பதற்கான அம்சங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

1. திட்டத்தின் இயல்பு - இத்திட்டத்தில் இணைந்து கொள்வதற்கு திட்டத்தின் ஊக்குவிப்பாளர்கள் புதிய பங்குபற்றுபவர்களை பொருட்கள் அல்லது சேவைகளைக் கொள்வனவு செய்வதன் மூலம் பணத்தினை முதலீடு செய்வதற்கு வேண்டுகிறார்கள் என்பதுடன் பின்னர் அப்பொருட்கள் அல்லது சேவைகளை விற்பனை செய்வதன் மூலம் இத்திட்டத்திற்கு மேலதிக பங்குபற்றுபவர்களைக் கொண்டு வருமாறும் வேண்டப்படுகின்றனர்.
2. வழங்கப்பட்ட. பொருட்கள் அல்லது சேவைகளுக்கான சந்தைப்படுத்தல் இயலுமை - சந்தையில் இப்பொருட்கள் அல்லது சேவைகளுக்கு பலமான கேள்வி இல்லாதிருப்பதுடன் ஊக்குவிப்பாளர்களினூடாக மட்டுமே இவை கிடைக்கக் கூடியதாகவும் இருக்கின்றன.
3. உயர் நுழைவுக் கட்டணம் - இத்திட்டத்தில் சேர்வதற்கான நுழைவுக் கட்டணம் பெரும்பாலும் உயர்வாகவே இருக்கின்றது. இது ஊக்குவிப்பாளர்களினால் வழங்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகளுக்கான விலையினூடான கட்டணமாக விதிக்கப்படலாம்.
4. இரண்டாந்தரச் சந்தையும் விற்பனைக்குப் பிந்திய சேவையும் - இப்பொருட்களுக்கு இரண்டாந்தரச் சந்தை இல்லாதிருப்பதுடன், விற்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கான விற்பனைக்குப் பிந்திய சேவைகளுக்கான உத்தரவாதம் ஊக்குவிப்பாளர்களினால் ஒரு போதும் வழங்கப்படுவதில்லை.
5. நிதி வருமானங்கள் - பங்குபற்றுபவர்களால் விற்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கான தரகு அவர்களுக்கு வழமையாக வழங்கப்படுவதில்லை. ஆனால் அதிகூடிய வருமானங்களைப் பெற்றுக் கொள்வதானால் புதிய பங்குபற்றுபவர்களை சேர்த்துக் கொள்ளுதல் வேண்டுமென்று அறிவுரை வழங்கப்படுகின்றது. ஒரு பங்குபற்றுபவரின் நிதி வருமானங்கள் அவரினால் கொண்டு வரப்படும் புதிய ஆட்சேர்ப்புக்களின் எண்ணிக்கையிலேயே தங்கியிருக்கின்றது.
6. மீண்டும் வாங்கும் கொள்கை - வாங்கிய பொருட்கள் மீள் விற்பனைக்குரிய தன்மையினைக் கொண்டிருப்பினும் ஊக்குவிப்பாளர்கள் இத்திட்டத்திலிருந்து விலகிய பங்குபற்றுபவர்களின் எஞ்சியிருக்கும் இருப்புக்களை மீண்டும் வாங்கும் கொள்கை ஒன்றைக் கொண்டிருப்பதில்லை.
7. பொருட்களின் விற்பனையில் கவனம் செலுத்துதல் - இறுதி நுகர்வோருக்கு பொருட்கள் அல்லது சேவைகளை சில்லறையாக விற்பனை செய்யும் நோக்கம் இத்திட்டத்தில் சிறிதளவாகவே காணப்படுகின்றது.
8. திட்டத்தைப் பற்றிய தகவல்கள் - பொதுவாக ஊக்குவிப்புப் பிரசுரங்கள் அல்லது ஊக்குவிப்பாளர்கள் திட்டத்தின் கம்பனி பற்றிய வதிவிடம், வீதி, விலாசம், அல்லது தொலைபேசி இலக்கம் என்பவற்றை வெளிப்படுத்துவதில்லை.
9. நம்பமுடியாத வருமானங்கள் பற்றிய தவறான உறுதிகள் - ஊக்குவிப்புப் பிரசுரங்கள் அல்லது ஊக்குவிப்பாளர் நம்பமுடியாத வருமானங்கள் (உ-ம் "சட்டரீதியாக மாதாந்தம் ரூ.100,000 இனைப் பெறுதல்") அல்லது "வளமானதும் சந்தோசமானதுமான வாழ்க்கை", "இலகுவாக புதிய ஆட்களை சேர்த்துக் கொள்ளமுடியும்" போன்ற நன்மைகளைப் பெறமுடியும் என உறுதிகளை அளிக்கின்றனர்.
10. இணையுமாறு நிர்பந்தித்து ஊக்குவித்தல் - வழமையாக ஊக்குவிப்பாளர்கள் புதிய பங்குபற்றுபவர்களை கம்பனி அல்லது பொருட்கள்/ சேவைகள் பற்றிய போதியளவு விளக்கங்களைப் பெற்றுக் கொள்வதற்கு இடமளிக்காமல் ஒப்பந்தங்களுக்குள் நுழைவதற்கு நிர்ப்பந்திக்கிறார்கள்.
11. பயிற்சிகளும் விற்பனை உதவிகளும் - ஊக்குவிப்பாளர் விற்பனை மற்றும் ஆட்சேர்ப்பு தொடர்பான பொருத்தமான முன்னெடுத்துச் செல்லும் பயிற்சிச் சந்தர்ப்பங்களை அவனுடைய/ அவளுடைய புதிய பங்குபற்றுபவர்களிற்கு வழங்குவதில்லை.
12. திட்டத்தின் எதிர்காலம் - திட்டத்தின் அடிமட்டத்திலிருக்கும் புதிய பங்குபற்றுபவர்கள் புதிய ஆட்சேர்ப்புக்களைச் செய்யமுடியாத நிலை எழும்போது அவர்கள் தமது முதலீட்டை இழக்க வேண்டி நேரிடும் என்பதுடன் அத்திட்டம் முறிவடையும் நிலையையும் அடையும்.
13. செயற்பாட்டுப் பிரதேசங்கள் - செயற்பாட்டுப் பிரதேசங்கள், பிரிவு அல்லது செயற்களம் தொடர்பான நியாயமான ஓர் திட்டத்தை கொண்டில்லாதிருப்பதுடன், ஊக்குவிப்பாளர்கள் பொதுவாக எந்தவொரு நியாயமான அல்லது பகுத்தறிவான வரையறைகள் இல்லாமல் அதிகரித்த ஆட்சேர்ப்புக்களுக்கு ஊக்கமளிக்கிறார்கள்.

## பிரமிட் கட்டமைப்பைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டத்தில் பங்குபற்றுதல் சட்ட விரோதமானதாகும்



**பிரமிட் தன்மையைக் கொண்ட திட்டங்கள் வங்கி தொழில் சட்டத்தின் 83C பிரிவின் கீழ் சட்ட விரோதமானதாகும். மேலும், சில கொடுப்பனவுகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் என்பன வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் மற்றும் பணத்தைத் தூயதாக்கல் தடைச் சட்டம் ஆகியவற்றின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படலாம்.**

**இப்படியான திட்டங்களை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆரம்பித்தல், வழங்குதல், ஏற்பாடு செய்தல், விளம்பரப்படுத்தல், கொண்டு நடத்துதல், நிதியிடுதல், நிர்வகித்தல் அல்லது நெறிப்படுத்துதல் என்பனவும் சட்ட விரோத செயல்களாகும்.**

## குற்றவாளிகளுக்கு சட்டத்தின்கீழ் அளிக்கப்படும் தண்டனை மிகவும் கடினமானதாகும்.

மேற்குறிப்பிட்ட செயல்கள் மூலம் ஏதாவது ஒரு நபர் இப்படியான தடைசெய்யப்பட்ட திட்டத்தில் பங்குபற்றிய குற்றவாளியாகக் கண்டு பிடிக்கப்பட்டால் அவர் பின்வருவனவற்றிற்கு உட்படுவார்.

- மூன்று வருடங்களுக்குக் குறையாத சிறைத் தண்டனை அல்லது
- ஒரு மில்லியன் ரூபாவுக்குக் குறையாத அபராதம் அல்லது
- சிறைத் தண்டனை மற்றும் அபராதம்

மற்றைய ஒரு நபருக்கு இழப்பு அல்லது தீமையை உண்டுபண்ணும் விதத்தில் குற்றங்களானது சுய விருப்பத்தினுடன் அல்லது தெரிந்து கொண்டு புரியப்பட்டிருந்தால் அதற்கான தண்டனை

- மூன்று வருடங்களுக்கு குறையாத மற்றும் ஐந்து வருடங்களுக்கு மேற்படாத கடூழியச் சிறைத் தண்டனை மற்றும்
- இரண்டு மில்லியன் ரூபா அபராதம் அல்லது திட்டத்தில் பற்குபற்றுபவர்களிடம் இருந்து பெறப்பட்ட இலங்கை நாணயத்தின் முழுத் தொகையின் இருமட்ங்கு என்பவற்றில் ஆகக் கூடிய தொகையைக் கொண்ட அபராதம்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

மேலதிக விசாரணைகளுக்கு
தொலைபேசி: 2477100, 2477105, 2477120, 2477129
தொலைநகல்: 2477711, மின்னஞ்சல்: banksup@cbsl.lk

CENTRAL BANK OF SRI LANKA
60 growth& stability
1950 - 2010

## மழை குறுக்கீடு போட்டி கைவிடப்பட்டது

(செஸ்டர் லீ ஸ்டிரீட்)

இந்திய - இங்கிலாந்து அணிகள் மோதும் முதல் ஒருநாள் கிரிக்கெட் போட்டி செஸ்டர் லீ ஸ்டிரீட்டில் நடந்தது. இந்தப் போட்டியில் வென்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பு செய்ய முடிபு செய்தது. இதனையடுத்து களமிறங்கிய இந்திய அணி 50 ஓவரில் 7 விக்கெட் இழப்பிற்கு 274 ஓட்டங்கள் எடுத்தது.

இந்திய அணி சார்பில் பார்த்தீவ் பட்டேல் 95 ஓட்டங்களும், ஹோலிவ் 55 ஓட்டங்களும்,ரகானே 40 ஓட்டங்களும், ரெய்னா 38 ஓட்டங்களும், தோனி 33 ஓட்டங்களும் எடுத்தனர். இங்கிலாந்து அணிசார்பில் பிரஸ்னன்,போர்ட் ஆகியோர் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதனையடுத்த இங்கிலாந்து அணி வெற்றி பெற 275 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இதன் பின்னர் களமிறங்கிய இங்கிலாந்து அணி 7.2 ஓவர்களில் 2 விக்கெட் இழப்புக்கு 22 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் மழை குறுக்கீடு செய்தது.இதனால் போட்டி தடைப்பட்டது.

மழை விடாது பெய்ததால் போட்டி தொடர முடியாத நிலை ஏற்பட்டது. இதன்காரணமாக போட்டி கைவிடப்பட்டது

# முதலாவது டெஸ்டில் ஆஸி. இலகு வெற்றி



முதலாவது டெஸ்டில் அவுஸ்ரேலிய அணி 125 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை அணியை வீழ்த்தி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

மஹேலஜெயவர்தன சதமடித்தும் இலங்கை அணி இரண்டாவது இன்னிங்சில் 253 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந் தது.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் வந்துள்ள அவுஸ்ரேலிய அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் கடந்த 31 ஆம் திகதி காலியில் ஆரம்பமானது. இப்போட்டி யில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலிய அணி முதலாவது இன்னிங்சில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 273 ஓட்டங்களை எடுத்து.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதலாவது இன்னிங்சில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 105 ஓட்டங்களை எடுத்தது.

இதன் மூலம் முதலாவது இன்னிங்சில் 168 ஓட்டங்கள் முன்னிலை பெற்ற அவுஸ்ரேலிய அணி இரண்டாவது இன்னிங்சில் சகலவிக்கெட்டுக்களையுமிழந்து 210 ஓட்டங்களை எடுத்தது.

இந்நிலையில் 379 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நேற்று முன்தினம் மூன்றாம் நாள் ஆட்டநேர முடிபில் இரண்டாவது இன்னிங்சில் 5 விக்கெட்டுக்களையிழந்து 120 ஓட்டங்களை எடுத்தது.

நான்காம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி இரண்டாவது இன்னிங்சில் 253 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதன் மூலம் அவுஸ்ரேலிய அணி 125 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலகுவாக வெற்றி பெற்று 3போட்டிகள் கொண்ட தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பாக மஹேல ஜெயவர்த்தன 231 பந்துகளில் (15 பவுண்டரிகள், ஒரு சிக்ஸ்சர் உட்பட) 105 ஓட்டங்களையும், அஞ்சலோ மத்யூஸ் 191 பந்துகளில் (13 பவுண்டரிகள் உட்பட )95 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ரியான் ஹரிஸ் 5 விக்கெட்டுக்களையும், ஜோன்சன், வோட்ஷன் தலா 2 விக்கெட்டுக்களையும், லியோன் ஒரு விக்கெட்டினையும் சாய்த்தனர்.இப்போட்டி நான்காம் நாள் ஆட்ட தேநீர் இடைவேளைக்கு முன்னரே முடிபடைந்தமை குறிப்பிடத்தக்கது

## 2012இல் கல்...

தெரிவுக்குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில் முதல் தடவையாக கல்விக் கொள்கையில் மாற்றம் ஏற்படுத்தப்பட உள்ளது.

நாட்டின் தேசியக் கல்விக் கொள்கையின் சகல துறைகளிலும் மாற்றம் ஏற்படுத்தப்பட உள்ள பாடத்திட்டம்,பரீட்சைகள், ஆசிரியர் கைநூல், பரீட்சை மதிப்பீடுகள், ஆசிரியர் இடமாற்றம்,ஆசிரியர் நியமனம், தனியார் மற்றும் சர்வதேச பாடசாலைகள், தரம் ஒன்றிற்கான அனுமதி, புலமைப் பரிசில், உயர்தரம், ஆசிரியர் பதவிஉயர்வு உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் முதல் கல்வி மறுசீரமைப்பு பாராளுமன்றத் தெரிவுக்குழு 24 தடவைகள் கூடி ஆய்வு நடத்தியுள்ளது. நாட்டின் கல்வித்துறை தற்போது எதிர்நோக்கி வரும் சகல பிரச்சினைகளுக்கும் புதிய கல்விச் சட்டத்தின் ஊடாக தீர்வு காண முடியும் என கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன மேலும் தெரிவித்தார். (ந-5)

# உலக தடகள சம்பியன் ஷிப்; 200 மீ. ஓட்டத்தில் போல்ட் தங்கம்

தென்கொரியாவில் நடைபெறும் உலக தடகள சம்பியன் ஷிப் போட்டிகளின் ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டத்தில் ஜமெக்காவின் உசைன் போல்ட் தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

100 மீற்றர் மற்றும் 200 மீற்றர் ஓட்டத்தில் உலக சாதனையாளராக உசைன் போல்ட் விளங்குகிறார் எனினும் இம்முறை உலக மெய்வன்மை சம்பியன் ஷிப் போட்டிகளில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 100 மீற்றர் இறுதிப் போட்டியில் உரிய நேரத்திற்கு முன்பே ஓட ஆரம்பித்ததால்அவர் போட்டியிலிருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டதால் ஏமாற்றத்துடன் வெளியேறினார்.

எனினும் நேற்று நடைபெற்ற 200 மீற்றர் ஓட்டப்போட்டியில் அவர் தங்கப்பதக்கத்தை சுவீகரித்துக்கொண்டார். இப்போட்டியில் உசைன் போல்ட் 19.40 வினாடிகளில் ஓடி முடித்தார். அமெரிக்காவின் வால்டர் டிக்ஸ் 19.70 வினாடிகளில் ஓடி வெள்ளிப்பதக்கத்தையும் பிரான்சின் கிறிஸ்போப் லெமைட்றே 19.80 வினாடிகளில் ஓடி வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

இதற்குமுன் 2009 ஆம் ஆண்டு பேர்லினில் நடைபெற்ற உலக மெய்வன்மைச் சம்பியன்ஷிப் போட்டிகளிலும் 100 மீற்றர் 200 மீற்றர் ஓட்டத்தில் உசைன்போல்ட் தங்கப்பதக்கம் வென்றிருந்தார். 1987 ஆண்டு கல்வின் சிமித் இரண்டாவது தடவையாகவும்200 மீற்றர் ஓட்டத்தில் சம்பியனாகியதின் பின்னர் தொடர்ச்சியாக இரு தடவை 200 மீற்றர் உலக சம்பியன் ஷிப் பட்டத்தை வென்ற முதல் வீரர் உசைன் போல்ட் ஆவார்.

## சனல் 4...

சில விடயங்கள் உள்ளது என அவர் ஒப்புக் கொண்டுள்ளார்.

வெள்ளைக்கொடியுடன் சரணடைய வந்த மக்கள் கொல்லப்பட்டதாக குற்றச்சாட்டு உள்ளது. இது குறித்து சரியான ஆதாரம் இருந்தால் அதன் மீது கவனம் செலுத்த முடியும். ஆனால் அடிப்படையற்ற விடயங்கள் குறித்து விவாதிக்க முடியாது என ரஜீவ கூறியுள்ளார்.

ஐ.நா பொதுச்சபை மற்றும் மனித உரிமைகள் கவுன்சில் கூட்டத்தொடர்கள் இம்மாதம் நடைபெற இருப்பதால் இது ஒரு கடினமான மாதமென சுட்டிக்காட்டியுள்ள அவர் சனல் 4 காணொளி மற்றும்தருஸ்மன் அறிக்கையின் பின் சர்வதேச விசாரணைக்கு இலங்கை வலியுறுத்தப்பட்டு வருவதாகவும் கூறி யுள்ளார். (ந-5)

## வடக்கில் உள்ள இராணுவ...

செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இந்தியாவிலுள்ள 2 இலட்சம் ஈழத்தமிழரும் நாடுதிரும்புவதற்கு ஏதுவான சூழ்நிலைகள் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். அவர்கள் இராணுவ பிரசன்னங்கள் இருப்ப தனால் தாயகம் திரும்புவதற்கு அச்சப்படுகின்றார்கள். தாயகம் திரும்பும் அகதிகளுக்கு சகல வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

தமிழ் மக்களுடைய நிலங்கள் அபகரிப்பதை, ஆக்கிரமிப்பதை இலங்கை அரசு உடனடியாக நிறுத்த வேண்டும்.

தமிழ் மக்களை அவர்களது வசிப்பிடத்திற்கு திரும்ப விடாமல் உயர் பாதுகாப்பு வலயங்களை அமைத்து விட்டு அந்த இடங்களில் சிங்கள மக்களை குடியமர்த்துவதை முதலில் நிறுத்த வேண்டும்.

பயங்கரவாத தடைச்சட்டம் முற்றாக நீக்கப்படவேண்டும் போன்ற 6 கோரிக்கைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் இந்திய அரசிடம் முன்வைக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.

இதையடுத்தே வடக்கில் இராணுவ முகாம்கள் அகற்றப்படமாட்டாதென பாதுகாப்புத் துறை தகவல் வெளியிட்டுள்ளதாக திவயின செய்தி தெரிவிக்கிறது. (ந-5)

## யாழ்.நகரை...

போன்று யாழ்ப்பாணத்தின் முக் கியமான இடங்களிலும் படைமுகாம்களின் முன்பாகவும் கண்காணிப்பு வீடியோ பதிவு கருவிகளைப் பொருத்த முடிபு செய்யப்பட்டுள்ளது.

உயர் தொழில் நுட்ப வீடியோ பதிவுக் கருவிகளைப் பொருத்துவதன் மூலம் இரகசியமாக கண்காணிக்க முடிபதுடன் பாதுகாப்பையும் பலப்படுத்த முடியும் என்று பாதுகாப்பு அமைச்சு கருதுவதாகத் தெரிய வந்துள்ளது. (ந-5)

## சகல மாவட...

பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ள அமைதியை நிலைநாட்டும் அதிகாரங்கள், போர்ப் பயிற்சிகள் பெற்ற முப்படையினருக்கு வழங்கப்பட்டுள்ளது ஆபத்தான நிலைமையென அரசியல் விமர்சகர்களும், ஆய்வாளர்களும், சிவில் அமைப்பினரும் சுட்டிக்காட்டியுள்ளனர். (ந-5)


வெளிநாட்டுக் கல்வி
தொழில்வாய்ப்புக்கு
திறக்கிறது...
புதிய பாதை



UK, Australia
New Zealand
USA, Canada
பட்டப்படிப்பை
மிகக் குறைந்த செலவில்
மலேசியாவில் தொடங்கி
ஒரு வருடத்தில்
விரும்பிய நாட்டுக்குச் செல்லுங்கள்

- யாழ்ப்பாணத்திலேயே விசாவைப் பெறலாம்
- உணவு, தங்குமிட வசதி ஏற்பாடுகள்
- பெருந்தொகைப் பணம் காட்டத் தேவையில்லை
- நம்பகமான, உத்தரவாதமான வழிமுறைகள்

10க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்கள்
தொழில் உத்தரவாதத்துடனான/
கற்கைநெறிகள்

உரிய கல்விச் சான்றிதழ்கள்,
ஆவணங்களைச் சமர்ப்பித்து
ஒரு மாதத்தில் பயண ஏற்பாடு

மேலதிக விபரங்களுக்கு
பாருங்கள்!
'சிகரம் தொடு'
ஒகஸ்ட் - செப் 2011 இதழ்





MEDIA
கல்வி வழிகாட்டல் பிரிவு
சிகரம் ஊடக இல்லம்
இல.221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 300 80 60

தமிழ் தகவல் தொழில் நுட்ப ஒருங்கமைப்பு நிர்வாகத்தின் கீழ்,
**இலண்டன் ஸ்ரீகனக துர்க்கை அம்மன் கணினி பயிற்சி நிலையம்**
இல 27 குமாரசுவாமி வீதி, கந்தர்மடம் | 021 – 4925334 | இல 114 டச்சு வீதி, சாவகச்சேரி



8வது ஆண்டில் சேவை நோக்குடன் குறைந்த கட்டணத்தில்
A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான விசேட பிரிவுகள் ஆரம்பம்

I.Basic Computer Application (2 Month)
(Introduction to Computer ,Ms Word, Ms Excel,Ms PowerPoint, Inetrnet & e-mail) Rs 1000.00 Only
II.Internet & e-mail (10 Hrs) Rs 500.00 Only
பதிவுகளை 09ம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளவும்
Online Classes





உல்லாசம் உங்கள் கண்முன்னே...
**TILKO JAFFNA CITY HOTEL**
TILKO hotel
No.70/6, K.K.S Road, Jaffna.
Tel: 021 2225969
web:www.cityhoteljaffna.com
e-mail: info@cityhoteljaffna.com




# நெருக்கடி நிலை ஏற்...

நாட்டின் எந்தப் பகுதியில் நெருக்கடி நிலை ஏற்பட்டாலும் இராணுவம் அங்கு உடனடியாகச் சென்று நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும். இராணுவம் தலையிடுவதை எவரும் தடுக்க முடியாது.

அவசரகாலச்சட்டம் நீக்கப்பட்டு விட்டதென்பதற்காக இராணுவம் தலையிடாது என எவரும் நினைத்து விடக் கூடாது.

நாட்டின் சமாதானத்தை நிலைநாட்டுவது பொலிஸாருக்கு மட்டுமானதல்ல அது இராணுவத்தினதும் கடமை.

இவ்வாறு இராணுவத் தளபதி லெப்டினண்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய தெரிவித்தார். (ந-5)


**After A/L?** CIMA-UK Per Level Rs.14,400 | Engineering-USA 80% off | BIT University of Colombo Per year Rs.20,000 | Multimedia USA 80% off
இலவச முன் பதிவுகளுக்கு இன்றே உங்கள் <Name>, <Address>, <Course> 772395895 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்பி காலதாமதத்தை தவிருங்கள்
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பு உத்தரவாதம்
Government School
Diploma Courses.. Free Course fee* MsOffice, AutoCAD, Web Designing *Hardware *Accounting *DTP *English,
MCS 324, Palaly Road, Campus Junction,Jaffna.
Supported By UNDP/JRRP
USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree
Kids Courses கணினி பாடங்கள், ஆங்கிலம், Games
Free Course fee: BCS-UK, IELTS / TOEFL, CISCO-CCNA, Oracle Java, ICDL



**பணியாளர் தேவை**
- 50 வயதிற்கு மேற்பட்டவர் (ஆண்கள்)
- விற்பனையாளர் (பெண்)

இடம்: யாழ்.நகரம் (6057)

லுமாலா ஆண் சைக்கிள், 8 மாத பொமனேரியன் ஆண் நாய் விற்பனைக்குண்டு.
0775040714



**YAALH ENGLISH ACADEMY**
வழங்கும்
**SPECIAL ENGLISH COURSES**
ஆசிரியர்: சண்முகம் முத்துலிங்கம்
வகுப்பிட அனுசரணை
**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி, யாழ்.நகர்.
- உத்தியோகத்தர்க்கு
- உயர்கல்வியினர்க்கு
- பள்ளிப்படிப்பு முடித்தவர்க்கு

ஆரம்பம்: 10.09.2011 சனிக்கிழமை பி.ப.5.00
மாதம் 16 மணிக்கல்வி 500/=, இலவசம் முதலிரு வகுப்புகள்
முழுவிபரங்கள்: 077 32 12 711 (6047)





வாழ்க்கையில் வசந்தம் உருவாக நல்லூர் கந்தனை வேண்டுகின்றோம்
இலங்கையின் தலைசிறந்து விளங்கும் முன்னனியான நிறுவனம்
**World Express Services**
உலக நாடுகளுக்கான துரித பொதிகள் மற்றும் கடிதங்கள் அனுப்ப எங்களை நாடுங்கள்



கிளை: 227, பலாலி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 2220356
(இந்திய தூதரகத்திற்கு அருகாமை)

தலைமை அலுவலகம்:
338, அளுத் மாவத்தை வீதி, கொழும்பு -15
தொ.பே: 0112520894

கிளை: 180/5 புகையிரத நிலைய வீதி, வைரவ புளியங்குளம், வவுனியா
தொ.பே: 024 490 3200

E.Mail: Worldexpress.ser@gmail.com www.worldexpressservices.com



முதல் தடவையாக **யாழ். மண்ணில்** ஆங்கிலக் கல்வியின் புதிய பரிமாணம்!



தலைநகரில் 20 வருடங்களுக்கு மேலாக தலைசிறந்து விளங்கும் பிரபல ஆங்கில ஆசிரியர் திரு.ஜெய நல்ரவி அவர்களால் நடாத்தப்படும் மாபெரும் பேச்சு ஆங்கிலப் பயிற்சிப் பட்டறை.

**NALRAVI SPOKEN ENGLISH**



A/L நிறைவு செய்த மாணவர்களுக்காக
குறிப்பு:- எங்கள் கல்வி நுணுக்கங்களை அறிந்து கொள்ளும் பொருட்டு முதல் நாளன்று மாணவர்களுடன் பெற்றோர்களும் இணைந்து கொள்ளலாம்.

முதல் நாள் பயிற்சி (செப்டெம்பர் 5ஆம் திகதி அன்று)
**இலவசம்**

செப்டெம்பர் 5ஆம் திகதியன்றிலிருந்தே (1ஆம் நாள்) ஆங்கிலம் பேச ஆரம்பித்து பயிற்சிப் பட்டறை இறுதியில் சரளமாக ஆங்கிலம் பேசுவீர்கள் என்ற தன்னம்பிக்கையை முதல் நாளிலேயே பெறுங்கள்.

இது நடக்குமா? இல்லாவிட்டால்
**விளம்பர ஆசை வார்த்தைகளா?**
உண்மையை கண்டறிய வாரீர்.

மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள், வெளிநாடு செல்ல இருப்போர், KET மற்றும் IELTS பரீட்சைக்கு தோற்றுவோர், அலுவலகம் செல்வோர், இல்லத்தரசிகள் போன்றவர்களுக்காகவும்

| | |
|---|---|
| நடைபெறும் இடம் | :- யாழ்.வீரசிங்கம் மண்டபம் |
| பயிற்சிக் காலம் | :- 1 மாதம் / 100 மணி நேரம் |
| நடைபெறும் காலம் | :- செப்டெம்பர் 5ஆம் திகதி முதல் ஒக்டோபர் 11ஆம் திகதி வரை |
| நேரம் | :- குழு 1 - காலை 8.30 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணி வரை<br>குழு 2 - நண்பகல் 1.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை |
| பயிற்சிக் கட்டணம் | :- Rs.6,500/= (NSE பயிற்சி Handouts, Audio CD க்கள் உட்பட)<br>முதல் நாள் பயிற்சி இலவசம். |

**NALBON** INSTITUTE OF ENGLISH STUDIES
*We are born for your bond*
527, Galle Road, Colombo 6. Tel 2363656 Fax 2360004
Website www.nalravi.com E-mail nalravi@yahoo.com

எங்கள் பேச்சு ஆங்கிலப் பயிற்சிப் பட்டறை இறுதியில் மாணவர்கள் பரீட்சிக்கப்பட்டு அவர்களின் பெறுபேறுகளிற்கேற்ப தரங்கள் வழங்கப்பட்டு சான்றிதழ்கள் கொடுக்கப்படும்.

(சர்வதேச வலையமைப்பில் இணைந்து கொள்ளும் நோக்கோடு **NALRAVI ENGLISH LANGUAGE CENTRE** NALBON INSTITUTE OF ENGLISH STUDIES எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.09.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.